Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**அற்புதன் அச்சகம்**

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 20 திங்கட்கிழமை (06.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 006

## அங்கர் முழு ஆடைப் பால்மாவின் 3 தொகுதிகளின் விற்பனைக்கு தடை

(கொழும்பு)

400 கிராம் அங்கர் முழு ஆடைப் பால்மாவின் மூன்று தொகுதிகளின் விற்பனையை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஹிராந்துருகோட்டைப் பகுதியில் மூன்று சிறுவர்கள் குறித்த அங்கர் பால்மாவை உண்டதையடுத்து ஏற்பட்ட பாதிப்பு குறித்து தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் சுமித் ஆனந்தா தெரிவிக்கையில்,

இந்த மூன்று தொகுதிகளில் அடங்கியுள்ள அங்கர் பால்மாவின் மாதிரிகளை பரிசோதனைக்காக சுகாதார அமைச்சு கடந்த 3 ஆம் திகதி எமக்கு அனுப்பியிருந்தது. நாம் இதனை பரிசோதனை செய்து மீளவும் சுகாதார அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம்.

19 ஆம் பக்கம் பார்க்க

**சுயலாபங்களுக்காக முரணான கருத்துக்கள்**

## மக்கள் நலன்சார் அபிவிருத்தியை முன்னெடுக்க மாட்டாது கூட்டமைப்பு



(யாழ்ப்பாணம்)

தமது சுயலாபத்திற்காக மாறுபட்ட கருத்துக்களை கூறிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்திகளை ஒருபோதும் முன்னெடுக்க முடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி வெண்புரவி பகுதியில் அமையப் பெற்றுள்ள பேபி டேவிட் முன்பள்ளியில் அப்பகுதி மக்களுடன் நேற்றைய தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

# நாட்டின் அபிவிருத்திக்கு பல்வேறு சக்திகள் இடையூறு

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் தற்போது மேற்கொளப்பட்டுவரும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பல்வேறு சக்திகள் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் மிலானோவில் இலங்கை பிரஜைகளை சந்தித்த போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

நகரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்தி கிராமங்களுக்கும் இன்று கிடைத்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, கிராமத்தின் அழகு நகரங்களில் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

குடிசை வீடுகளுக்கு பதிலாக அடுக்கு மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 20,000 பேருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாட்டில் அபிவிருத்தி ஏற்படுகின்றபோது பல்வேறு சக்திகள் அதற்கு இடையூறுகளை விளைவிப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, அதனை தவிர்க்க முடியாது எனக் கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகளை மீறவில்லை எனத் தெரிவித்த

19 ஆம் பக்கம் பார்க்க

## முல்லையிலும் சாட்சியப் பதிவு

(முல்லைத்தீவு)

காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு முல்லைத்தீவு மாவட்டத்தில் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை சாட்சியங்களைப் பதிவு செய்யுமென ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் டி.கே.கெலி தெரிவித்தார்.

சாட்சியங்களை ஆணைக்குழு பதிவு செய்யும் போது யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## இராணுவ ட்ரக் - ஆட்டோ மோதல் இளைஞர் உயிரிழப்பு, மூவர் படுகாயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் நேற்று மாலை 6.00 மணியளவில் இராணுவ ட்ரக்குடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்ததுடன், 4 பேர் காயமடைந்தனர்.

பிறந்த நாள் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு விட்டு முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த குமாரசாமி திவாகரன் (வயது - 28) என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த நடராசா நிரோசன் (வயது - 21), கச்சாயைச் சேர்ந்தவர்களான உதயகுமார் இதயநிதன் (வயது - 28), சிவகுமார் வின்சன் (வயது - 19), எழுதுமட்டுவாழைச் சேர்ந்த சின்னதம்பி தபேந்திரன் (வயது - 23) ஆகியோர்

19 ஆம் பக்கம் பார்க்க

## கல்வி நடவடிக்கைக்கு இடையூறு; விலக்கப்படுவர் மாணவர்கள்

### அமைச்சர் எஸ்.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் மாணவர்கள் கல்வி செயற்பாட்டிலிருந்து விலக்கப்படுவர் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிய மகளிர் விடுதியை திறந்து வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகங்களில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களை தடுக்க சில மாணவர்கள் முயற்சிப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் காலம் என்பதால் அமைதியாக இருப்பதாக தெரிவித்த அமைச்சர், மாணவர்களின் போராட்டங்கள் தொடர்பில் சிறிதளவேனும் அச்சம் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

## காலவரையறையின்றி மூடப்பட்டது சப்ரகமுவ பல்கலை

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. மாணவிகள் சிலர் பலவந்தமாக மாணவர் விடுதிக்குள் பிரவேசித்ததால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சந்தன பீ உடவத்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பல்கலைக்கழக வளாகம் அனைத்து மாணவர்களுக்கும் தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் அனைவரும் நேற்று மாலை ஆறு மணியுடன் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து வெளியேறவேண்டும் என சப்ரகமுவ பல்கலைக்கழக உபவேந்தர் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## போலி தங்க விற்பனை வசமாக மாட்டினர் நால்வர்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி பிரதேசத்தில் மக்களை ஏமாற்றி போலி தங்கத்தை விற்பனை செய்வதற்கு முயன்ற நால்வரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்தே அந்த நால்வரையும் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து கப் ரக வாகனம், பித்தளை செம்பு ஒன்று, இரண்டு கிலோ 800 கிராம் நிறையில் போலியான முறையில் தயாரிக்கப்பட்டிருந்த தங்க பொத்தான்கள் மற்றும் 3 கிலோ 230 கிராம் நிறை கொண்ட ஈய உருண்டைகள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (25)






# சாதனை மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்கள் போற்றுதற்குரியவர்கள்

## -வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் புகழாரம்



(கிளிநொச்சி)

கிராமங்களும் எதிர்காலத்தில் உலகின் பரிணாம வளர்ச்சியின் வீச்சோடு இணைந்து பயணிக்கவேண்டும் என்ற சிந்தனைக்கமைவாக வாய்ப்புக்கள் குறைந்த பிரதேசத்தில் சாதனைகள் படைக்கும் மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர்கள் போற்றுதற்குரியவர்கள். சர்வதேச ஆசிரியர்தினத்தில் அவ் ஆசான்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளி.விவேகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழாவில் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வாய்ப்புக்கள் குறைந்த இப்பிரதேசத்தில் அமைக்கப்பெற்று தலைநிமிர்ந்து நிற்கும் இவ் விவேகானந்தா வித்தியாலயத்தில் மிகவும் குறுகியகால எல்லைக்குள் மிக பெரும் சாதனைகள் படைக்கின்ற மாணவர்களாக இச்சிறார்களை உருவாக்கிவிட்ட ஆசிரியர்கள் போற்றுதற்குரியவர்கள்.

அத்தோடு இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் உரமூட்டும்வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பாடசாலை கலை அரங்கை மேலும் அழகுபடுத்துவதற்காக தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருக்கின்றார். அத்தோடு வித்தியாலய மைதானத்தின் கோல் கம்பத்தினை அமைப்பதற்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து எழுபத்தையாயிரம் ரூபா நிதியினை நான் ஒதுக்கியுள்ளேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இப்பாடசாலையின் ஸ்தாபகர் என்ற ஸ்தானத்தை எடுப்பதற்கு காரணமாக இருந்தது இவ்வாறான கிராமப் பிள்ளைகளும் முன்னேறிவரும் உலகின் வீச்சோடு இணைந்து பயணிக்கத் தயாராக வேண்டும அதற்கான வாய்ப்பை உருவாக்கிக்கொடுக்கவேண்டும் என்ற நீண்டகால சிந்தனையின் அடிப்படையிலான செயற்பாடே ஆகும். அது சாத்தியப்படும் என்ற நோக்கின் அடிப்படையிலேயே அவர் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது வழக்கம் அதன் ஆரம்பகட்ட இலக்கு எட்டப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# காரைநகரில் உறங்கும் மின் விளக்குகள்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் உள்ள பல வீதி மின் விளக்குகள் ஒளிர்வதில்லை.

குறிப்பாக ஆலடிச் சந்தியில் மின் மாற்றியுடன் இணைக்கப்பட்டுள்ள மின் விளக்கும் அதனை அடுத்த மின் விளக்கும் கடந்த நான்கு மாதங்களாக ஒளிர்வதில்லை.

பிரதான வீதியும், கசூரினா பீச், சிவன் கோவில் வீதிச் சந்தியில் பொருத்தப்பட்ட வீதி விளக்கு மாதக்கணக்காக ஒளிராமல் காணப்படுகின்றது.

அதேவேளை சில மின் விளக்குகள் இரவு, பகல் என்றில்லாமல் ஒளிர்ந் தவண்ணம் இருக்கின்றன. இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகின்றனர். (50)

## துர்நாற்றம்

சண்டிலிப்பாய் சந்தியில் கீரிமலை வீதியில் காணப்படும் பஸ் தரிப்பு நிலையப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதால் இளவாலை, கீரிமலை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு பகுதிகளுக்கு பஸ்ஸிற்காக காத்திருக்கும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

குறித்த பஸ் தரிப்பை அண்டிய சூழலில் நீர் ஓடும் வடிகான் காணப்படுவதால் வாடிகான் புல், பூண்டுகள், குப்பை கூழங்களால் நிரம்பி இருப்பதாலும் இத்தகைய நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (66)

# முழுநிலாக் கலை விழா

(தெல்லிப்பளை)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டு வடமாகாண கல்வி வலயங்களினால் நடத்தப்பட்டு வரும் முழுநிலாக் கலைவிழா இந்த மாதம் வலிகாமம் கல்வி வலயத்தினால முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்விழா நாளை மறுதினம் புதன்கிழமை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களது கலைநிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. வலய மட்ட, தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களின் கலை நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. (06)

# தெரிந்தவருக்கு கொடுத்ததால் பறிபோனது மோட்டார் சைக்கிள்

(மல்லாவி)

மோட்டார் சைக்கிளை தெரிந்தவரிடம் நம்பிக்கையுடன் கொடுத்தவர் ஏமாந்தார். கரும்புள்ளியான் பகுதியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை விஜயன் என்பவருக்கே இவ்வாறு நடந்துள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் தன்னுடன் தொழில் புரிந்தவரிடம் (Np XT 5124) என்ற இலக்க மோட்டார் சைக்கிளை கொடுத்துள்ளார்.

எடுத்துச் சென்றவர் மீண்டும் வருவார் என நம்பிக்கையுடன் காத்திருந்த போதிலும் இதுவரையும் மோட்டார் சைக்கிளை கொண்டுசென்றவர் திரும்பி வரவில்லை. இது தொடர்பாக மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (140)



வேலணை துறையூர் இளைஞர் கழக அலுவலகம் நேற்று நண்பகல் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட விருந்தினர்களையும், இளைஞர் கழக பெயர்ப் பலகையினை துறையூர் ஐயனார் ஆலய நிர்வாக உறுப்பினர் ஆ.செல்வராசா திறந்து வைப்பதனையும் காணலாம். (21)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2569 திகதி 04-10-2014

ஆங்கில எழுத்து: X

வெற்றி எண்கள்: 07 27 47 54

போனஸ் இல: 44

ஜக்பொட் பரிசு ரூ.11,145,625/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 203296 | 20/- | 4,065,920/- |
| 2 இல | 14590 | 100/- | 1,459,000/- |
| 3 இல | 330 | 1,000/- | 330,000/- |
| 4 இல | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8089 | 40/- | 323,560/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 571 | 1,000/- | 571,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,145,625/- | - |
| 1 இல + போனஸ் இல | 9648 | 100/- | 964,800/- |
| 2 இல + போனஸ் இல | 473 | 500/- | 236,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 410 | 200/- | 82,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 237445 | | 9,764,280/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.10.08 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 11,700,250/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 23335467

(C/3531)



சிறு விளம்பரம்

## டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3800)


# பொதுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் சிவன்கோவில் மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மாணிக்க வாசகர் மடாலய மண்டபத்தில் கல்விக் காருண்யன் இ.எஸ்.பி.நாகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அடியார்கள் மற்றும் அங்கத்தவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு செயலாளர் அ.நா.பாலகிருஸ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# ஒருவருக்கு டெங்குத்தொற்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய ஒருவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அண்மை நாட்களாகப் பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

எனவே நீர் தேங்கியுள்ள பகுதிகளை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தும், சிரட்டைகள் பேணிகள் போன்ற மழைநீர் தேங்கவல்ல பொருட்களை அழிப்பதன் மூலமாகவும் டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# விளக்கமறியல்

(பருத்தித்துறை)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 20 வயதுடைய நபர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துன்னாலையைச் சேர்ந்த இந்த சந்தேகநபர் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச் சந்தேகநபர் பல மோட்டார் களவு, மற்றும் வாள் வெட்டுடன் தொடர்புடையவர் எனவும், அவருக்கு எதிராக பல வழக்குகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (18)

# விஷமிகளின் அநாகரிக செயற்பாடு கவனமெடுப்பார்களா அதிகாரிகள்?

## கேள்வியெழுப்புகின்றனர் மக்கள்

(சுன்னாகம்)

நவாலி மகேசர் வீதியில் விஷமிகளினால் கண்ணாடிப் போத்தல்கள் உடைத்து வீசப்பட்டிருப்பதால் அவ் வீதி வழியாக பயணிப்போர் மற்றும் பயணம் செய்யும் வாகனங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் குறிப்பாக நவாலி ஸ்தான சி.சி.த.க.பாடசாலை மற்றும் அமெரிக்கன் மிஷனரி இலங்கை திருச்சபை தேவாலயம் அமைந்துள்ள பகுதியிலுள்ள நீர் ஓடும் வடிகால் பகுதிகளிலும் இவ்வாறு உடைக்கப்பட்ட கண்ணாடிப் போத்தல்கள் ஏனைய கழிவுகள் அதிகளவில் கொட்டப்பட்டிருப்பதால் மழை பெய்கின்ற போதும் நீர் வழிந்து ஓடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து பொதுமக்களின் நலனில் அக்கறை செலுத்தவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# மத்திய கல்லூரி ஆசிரியருக்கு 'பிரதீபாபிரபா' விருது



(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் ஆசிரியர் செல்வி. கையிலாசபிள்ளை கலாவதிக்கு ஜனாதிபதியின் பிரதீபா பிரபா விருது கிடைத்துள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு மகர ஹமவில் உள்ள தேசிய கல்வி நிறுவக மண்டத்தில் இலங்கை ஜனநாயக்க குடியரசின் பிரதமர் டி.எம்.ஜயரத்ன தலைமையில் நடைபெறவுள்ளது.

மேலும் மத்திய கல்லூரி ஆசிரியருக்கு பிரதீபா பிரபா விருது கிடைத்ததையிட்டு பாடசாலை சமூகம் மற்றும் அராலி கல்விமான்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

# குடாநாடு தழுவிய ஆசிரியர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரியின் ஆசிரியர் தின விழா இன்று காலை 9 மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள பிரிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரியின் சிற்றிக் கம்பஸில் நடைபெறவுள்ளது.

கல்லூரி மாணவர்களின் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்கு பிரிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரியின் தலைவர் கலாநிதி பாலசுந்தரம் ஆனந்தகுமார் பிரதம விருந்தினராகவும் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி.யசிந்தா அன்ரன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நிர்வாகிகளான செல்வி சின்னத்தம்பி பூபதி, மரியதாஸ் றீகன், தலைமை ஆசிரியரான திருமதி கொன்மக்காலியஸ் லவன்சியா ஆசிரியர்களான செல்வி சந்திர சூரியர் நிறைமதி, செல்வி சோதிலிங்கம் மயூரி மற்றும் எஸ்.வினோதிகா ஆகியோர் மாணவர்களால் கௌரவிக்கப்படவுள்ளனர். அதனைத் தொடர்ந்து பெற்றோர் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

◆◆◆ ◆◆◆ ◆◆◆

(வேலணை)

நயினாதீவு மகாவித்தியாலய கல்விப் பொதுத்தராதர உயர்தர விடுகை மாணவர்களின் 2014 ஆம் ஆண்டின் ஆசிரியர்தின விழா நாளை செவ்வாய்க்கிழமை நயினாதீவு மகாவித்தியாலய அரங்கில் மாணவர் மன்றத் தலைவர் செல்வன் கே.கிருத்திகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக மகாவித்தியாலயத்தின் முன்னாள் இளைப்பாறிய அதிபர் சோ.குகநேசன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக தீவகக்கல்வி வலய பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் கௌரவ விருந்தினர்களாக நயினாதீவு ஸ்ரீ நாகவிகாரை விகாரதிபதி வணக்கத்துக்குரிய நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

மேலும் தீவகக் கல்விவலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், என பல்துறை சார்ந்த அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். இவ்விழாவில் விழா நாயகர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (05)

# உடைந்த மலசலகூட குழி துர்நாற்றம் வீசுவதாக விசனம்




(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள மலசல கூட கிடங்கு ஒன்றின் மேல் பகுதி உடைந்த நிலையில் இருப்பதால் துர்நாற்றம் வீசுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது விடயம் தெரிந்திருந்தும் கூட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லையென அப்பிரதேச மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர். (140)

# இனியும் வேண்டாம் போர்க் கால கோபம்




ஜனாதிபதி மகிந்தர் யாழ்ப்பாணத்தில் நடத்தப்போற அபிவிருத்திக் கூட்டத்தில கலந்து கொள்கிறதோ இல்லையோ எண்டு தெரியாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழம்பிப் போயிருக்கு.

சம்பந்தனும் சுமந்திரனும் சுரேசுஷ் பிரேமச்சந்திரனும் செல்வமும் வினோவும் கலந்துகொள்ளச் சொல்லுகினம்.

விக்கியும் அவற்றை மாகாண சபைக்காரரும் கலந்து கொள்ளக்கூடாது என்கினம்.

இதைப் பற்றி கூட்டமைப்புக்குள்ள அஞ்சாறு நாட்களாக பட்டிமன்றம் நடந்து கொண்டிருக்கு.

மாகாண சபையை ஒழுங்காக இயக்கிறதைப் பற்றியே முடிவெடுக்கமாட்டாத இந்தச் சிங்கங்கள் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணப்போகினமாம். இதில் கொஞ்சப் பேர் தமிழீழத்தை வேற கனவு காணுகினம். அய்யோ... அய்யோ... அய்யய்யோ!!!

ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில நடத்திற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில கலந்து கொண்டால் தமிழ்த் தேசியத்தின்ர கற்புக் கலைஞ்சு போயிடும் எண்டு கொஞ்சப் பேருக்கு கலக்கம்.

அதலா, இந்தக் கூட்டத்தைப் புறக்கணிக்கோணும் எண்டு விடாப்பிடியாக நிற்கினம்.

இவைக்கு சனங்களைப் பற்றித் துளிகூட அக்கறையோ, கவலையோ கிடையாது.

இவைதான் ஷபுலிவேசம்; போட்டுக் கொண்டு மேடை மேடையாக முழங்கிக் கொண்டு திரியிறவை. போதாக்குறைக்கு போலித் தேசியப் பேப்பர்களுக்கும் இணையத் தளங்களுக்கும் அறிக்கை விடுகிறவையும் இவைதான்.

தமிழீழம் தான் இறுதித் தீர்வு எண்டு முழங்கிறவையும் சபதம் எடுக்கிறவையும் இவையே.

ஆனால், உருப்படியாக ஒரு மசிரையும் புடுங்கமாட்டினம்.

வெறும் வாய்சொல் வீரர்கள் அவ்வளவுதான். ஆனால், இவையின்ரை கையிலதான் இப்ப வடக்கு மாகாண சபையின்ரை கொன்றோல் ஸ்விச். (Control switch) இருக்கு.

மற்றத்தரப்பு மாகாண சபையை எப்பிடியாவது கொஞ்சம் நல்ல மாதிரி நடாத்த வேணும். இப்பிடியெண்டால்தான் சனங்களிட்ட ஒரு நல்ல அபிப்பிராயத்தைப் பெறலாம். அப்படி நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றால்தான் நாளைக்கு நாடாளுமன்றத் தேர்தலிலையோ இல்லாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை எதிர்காலத்திலையோ வெற்றியைப் பெறலாம் எண்டு நினைக்குது.

இப்பிடி ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் எடுத்ததுக்கெல்லாம் எதிர்த்தும் மறுத்தும் வந்தால் கடைசியில கட்டியிருக்கிற கோவணமும் மிஞ்சாது எண்டு இந்தத் தரப்பு எண்ணுது.

போர்க்காலக் கோபத்தை வைச்சுக் கொண்டு அரசாங்கத்தை தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கேலாது. இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வைத் தராமல் இழுத்தடிச்சுக் கொண்டிருக்குது எண்டு இன்றும் சனங்களுக்கு சொல்லிக் கொண்டிருக்க முடியாது. இப்பிடியே சொல்லிக் கொண்டிருந்தால் சனங்கள் மெல்ல மெல்ல அரசாங்கத்தின்ர பக்கத்துக்கும், சனங்களுக்கும் சேவை செய்யிற தேவானந்தாவின்ரை பக்கத்துக்கும் போயிடுங்கள். இப்பவே பாதிச் சனங்கள் மனம் மாறியிருக்குதுகள். மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு வாக்குப் போட்ட சனங்களும் ஆதரவைத் தேடித்தந்த ஆதரவாளர்களும் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கிட்டினமாம். இன்னும் நாங்கள் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்) எல்லாத்தையும் இழுத்தடிச்சமெண்டால் பிறகு நல்லாய்க் கரைச்சல் படவேணும் எண்டு கூட்டமைப்பின்ரை உயர்பீடம் சொல்லுது.

அரசியல்ல பழம் தின்டு கொட்டை போட்டவர் சம்பந்தன்.

சரியோ, பிழையோ கொஞ்சம் விசயம் விளங்கின ஆள் சுமந்திரன்.

இவை ரண்டு பேரும்தானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சியும்.

இவை ரண்டு பேரையும் விட்டால் கூட்டமைப்பின்ரை கதையும் சரி, தமிழரசுக் கட்சியின்ரை கதையும் சரி.

இந்த ரண்டு பேரும் இருக்கிறதாலதான் இந்தியாவோ, அமெரிக்காவோ, பிரித்தானியாவோ ஆரோ எண்டாலும் கதைச்சுப் பேசுகினம்.

இந்த ரண்டு பேரும் இல்லையெண்டால் கூட்டமைப்பை ஒரு நாயும் திரும்பியும் பாக்காது.

ஆனால், இப்பிடியெல்லாம் இருந்தும் இவை ரண்டு பேரும் சொல்லிற சொல்லைக் கேட்கிறதுக்கு கொஞ்ச 'உஷார்' மடையன்கள் தயாராக இல்லை.

இப்படித்தானிருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை கதையும் கதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பியிருந்த தமிழ்ச் சனங்களின்ர விதியும்.

"விதியே விதியே... தமிழ்ச் சாதியை என்ன செய்ய நினைத்தாயோ...!!"

வெற்றியில் புதிதாக விரல் ஒன்றும் முளைப்பதில்லை. தோல்வியில் உயிர் ஒன்றும் போவதில்லை.போராடு... -கவிஞர் சுகி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கருத்துச் சுதந்திரத்தின் அளவு?

கருத்துச் சுதந்திரம், தணிக்கை பற்றியெல்லாம் இன்று புதிய பல கேள்விகள் உருவாகிவிட்டன.

ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் இருக்கிறது; உரிமைகள் இருக்கின்றன – அடுத்தவரைப் பாதிக்காத வரையில்.

எல்லையற்ற சுதந்திரம் உண்டாக்கும் பாதிப்புகளை அறிந்து கொண்டுதான் தடைகளையும் விதிகளையும் மனிதகுலம் உருவாக்கிக் கொண்டது. மனதில் தோன்றுவதை எல்லாம் பேசிவிட முடியாது என்பதை உணர்ந்தபின் வகுத்ததுதான் நல்ல வார்த்தைகளும் கெட்ட வார்த்தைகளும்.

எந்த சொற்கள் தன் மனதை புண்படுத்துமோ அந்த சொற்களை பிறரிடம் பேசக்கூடாது என்ற நாகரிகம் அங்கிருந்து வளர்ந்தது. சுயதணிக்கையும் அதை உணராமல் போகக்கூடிய சந்தர்ப்பத்தில் பொதுத் தணிக்கைகளும் தேவைப்பட்டன.

இன்றைய இணையத்தள வளர்ச்சியோடு கருத்துச் சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். சமூக வலைத்தளங்கள் இந்த அளவுக்கு வளர்ச்சி பெறும் என்றோ மக்களிடம் தவிர்க்க முடியாத அங்கமாக மாறும் என்று சில ஆண்டுகள் முன்புவரை யாரும் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாது.

இணையத்தின் முகத்தையே இவை மாற்றியிருக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளில் புரட்சி வெடிப்பதற்கும் ஆட்சி மாற்றங்கள் நடந்ததற்கும் ஃபேஸ்புக் போன்ற இணையதளங்களே காரணம் என்று ஆகிவிட்டன.

இன்றைய இணையதளங்கள், எதை வேண்டுமானாலும் கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்கின்ற அளவுக்குப் பரந்துபட்ட அறிவுமேடையாக இருக்கின்றது என்பது மிகவும் உண்மை.

அதேவேளையில், யார் கேட்டாலும், எந்தத் தகவலை வேண்டுமானாலும் கொடுக்கிறது என்பதுதான் சங்கடப்படுத்துவதாக இருக்கிறது. பல அரசாங்கங்களுக்கு இவை தலையிடியாகிவிட்டன.

ஏற்கனவே பல அரசுகள் தங்கள் நாட்டில் பல இணையத்தளங்களை தடைசெய்திருக்கின்றன. இணையத்தில் இடம் பெறும் கருத்துகளுக்கும் கட்டுப்பாடுகள் தேவை என பல நாட்டு அரசுகள் இப்போது நினைக்கின்றன.

எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் கருத்துகள் கொட்டப்படுகின்றன. ஒரு மதத்தைப் பற்றியோ அல்லது மதச் சடங்கைப் பற்றியோ ஃபேஸ்புக்கில் தெரிவிக்கப்படும் கருத்து, ஒரு தனிநபர் கருத்தாக இருக்கலாம். ஆனால், அது ஃபேஸ்புக் நண்பர்கள் மூலமாக அனைவருக்கும் பரப்பப்படும்போது அதனால் ஏற்படும் பின்விளைவுகள், மோதல்களை எதிர்கொள்ள வேண்டியது அரசும் நிர்வாகமும்தானே? என்பது தடைக்கு அவர்கள் கூறும் காரணம்.

அரசை, தலைவர்களை மட்டுமின்றி சாதி, மதம், இனம், மொழி ரீதியாகவும் கீழ்த்தரமான அவதூறான கருத்துக்கள் இன்டர்நெட்டில் கொட்டப்படுகின்றன. நாகரிகமாக எழுதுமாறு தளங்கள் வேண்டிக் கொண்டாலும் குப்பை குறையவில்லை.

பத்திரிகையில் தொலைக்காட்சியில் தவறான, அவதூறான கருத்துகளுக்காக சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க சட்டங்கள் இருக்கும்போது இணையம் மட்டும் விதிவிலக்காக எதையும் பேசலாம் என்பதில் நியாயம் இல்லை என்பது அவர்கள் வாதம்.

இதை எதிர்ப்பவர்கள், கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமைகளை அரசுகள் நசுக்கப் பார்ப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், யாரைப் பற்றியும் என்ன வேண்டுமானாலும் பேசலாம், எழுதலாம் என்று கிளம்பினால் மீண்டும் கற்காலத்துக்கு போக நேரிடும் என்கிறார்கள் மற்றவர்கள்.

வலைத்தளங்கள் அவற்றின் சமூகப் பொறுப்பை உணர்ந்து செயற்படாவிட்டால், சமூகப் புரட்சிக்கு அவை காரணமானதைப் போல சமூகச் சீரழிவுகளுக்கும் அவை காரணமாகலாம் என்பதில் ஐயமில்லை.

- ஆசிரியர்.

# போதைப் பொருட்களின் பிடியிலிருந்து சமூகத்தை பாதுகாப்பது எப்படி?

## சண்டிலிப்பாயில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் பாவனையில் இருந்து சமூகத்தை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்த விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இந்த செயற்றிட்டத்தின் ஒரு கட்டமாக, ட்ரான்ஸ்பரன்ஸி இண்டர்நஷனல அமைப்பிற்கும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

போதைப்பொருள், மற்றும் சட்டம் தொடர்பாக பிரதேசத்தவர்களை வலுப்படுத்தும் நோக்குடன் இச்சந்திப்பு இடம்பெறறது.

ட்ரான்ஸ்பரன்ஸி இண்டர்நஷனல் அமைப்பானது பல பிரதேசங்களிலும் போதைப்பொருள், மதுபாவனை, சட்ட ஆலோசனை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தி வருகின்றது.

இதன் அங்கமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைகுள் மேற்படி செயற்றிட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காகவே இக் கலந்துரையாடல், இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் ட்ரான்ஸ்பரன்ஸி இண்டர்நஷனல் அமைப்பின் வடமாகாண இணைப்பாளர் ரவீந்திர டீ சில்வா உள்ளிட்டவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் ச.செந்தில்குமரன், பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.அனுஷன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், பொருளாளர் அ.ஜெபநேசன் உள்ளிட்ட நிர்வாக சபையினர் இளைஞர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (48)

# கறுப்பு பட்டியலை நீக்க உதவுங்கள் பொதுநலவாய அமைப்பிடம் கோரிக்கை

(லண்டன்)

இலங்கைக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. பொதுநலவாய அமைப்பு இந்த விடயத்தில் தலையிட வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள புலம்பெயர் அமைப்புக்களையும் தனிப்பட்டவர்களையும் அதில் இருந்து நீக்குமாறு இந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரித்தானியாவில் உள்ள பொதுநலவாய நாடுகளின் அலுவலகத்திடம் இந்தக்கோரிக்கையை உலக தமிழ் பேரவை முன்வைத்துள்ளது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உலக தமிழர் பேரவையின் தலைவர் கேட்டுள்ளார்.

ஒக்ரோபர் முதலாம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

# காணாமற்போனோர் விசாரணைகளில் முறைகேடு எதுவும் நடக்கவில்லை

## ஆணைக்குழுவின் தலைவர் பரணகம தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமற போனோர் தொடர்பான விசாரணை நடைமுறைகளில் முறைகேடுகள் காண்பட்டதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் முற்றாக மறுத்துள்ளார். விசாரணைகளின் போது மொழிபெயர்ப்பு பிழைகள் ஏற்பட்டுள்ளதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பிழையானது என காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் பாரியளவில் மொழிபெயர்ப்பு பிழைகள் காணப்படுவதாக மாற்றுக்கொளகைகளுக்கான கேந்திர நிலையம் ஏற்கனவே குற்றம் சுமத்தியிருந்தது.

கடந்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெற்ற அமர்வுகளின் போது மொழிபெயர்ப்பு பிரச்சினைகள் ஏற்பட்டதாகத் தெரிவித்திருந்தது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெறும் வளங்களைக் கொண்டே ஆணைக்குழு பணிகளை மேற்கொண்டு வருவதாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.

தமது மொழிபெயர்ப்பாளர் ஓய்வு பெற்ற நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர் எனவும் ஏனையவர் சட்ட உதவி ஆணைக்குழுவில் பணியாற்றுபவர் எனவும் பரணகம தெரிவித்துள்ளார்.

காலை முதல் மாலை வரையில் மொழிபெயர்ப்பாளர்கள் பணியாற்றி வருவதாகவும் சில பிழைகள் ஏற்படுவது வழமையானதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு வெளிப்படைத் தன்மையுடன் விசாரணைகளை நடத்தி வருவதனால் வேறும் பிழைகளையோ தவறுகளையோ சுட்டிக்காட்ட முடியாத தரப்பினர் சின்ன சின்ன பிழைகளை பூதாகரமாக்கிக் காண்பிக்க முயற்சிக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

காணாமற போதல்கள் தொடரபில் ஆராய்வதற்கு தனியான ஓர் குழு நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளில் பங்கேற்போரை புகைப்படம் எடுத்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி தமக்கு இதுவரையில் எவரும் முறைப்பாடு செய்யவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய வங்கியில் தொழில் வாய்ப்பு கோரப்படுகிறது விண்ணப்பம்

(யாழ்.நிருபர்)

இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் அல்லாத தரத்திற்கு இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் காலத்தினைக் கொண்ட கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளராக நியமிப்பதற்கு தகைமை வாய்ந்த மற்றும் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தமிழ்மொழி மூலமான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து வடிவமைப்பு (தமிழ்) தொழில்சார் நிபுணத்துவ டிப்ளோமா பெற்ற 40 வயதுக்குட்பட்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும். ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 2014.10.24. விண்ணப்பங்கள் பணிப்பாளர், மனிதவளத்திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல,30, ஜனாதிபதி மாவத்தை கொழும்பு - 01 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (10)

## அவதானி கட்டுரையிலிருந்து

**மலையாள நடிகர் சோபன் பாபுவுடன் அவருக்கு காதல் ஏற்பட்டபொழுது அவர் ஏற்கனவே திருமணமானவர் என்பது தெரிந்தும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர். ஒரு கட்டத்தில் சோபன் பாபுவுடன் ஏற்பட்ட மனக்கசப்பினால் அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைகளை விழுங்கி தற்கொலை செய்ய முயன்றார். அவரை மருத்துவமனையில் பார்த்து ஆறுதல் சொன்ன எம்.ஜி.ஆர். அதன் பின்னர் அவரை தமது பாதுகாப்பிலேயே வைத்துக்கொண்டார்.**



# நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானா.... சொல்லுங்கள்

தமிழகத்தில் காமராஜர் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் இயங்கிய வேளையில் பிரசாரக் கூட்டத்தில் பேசுவதற்காக நடிகை நாட்டியப்பேரொளி பத்மினி மேடையில் அமர்ந்திருந்தார்.

அப்பொழுது மேடைக்கு வந்த காமராஜருக்கு யார் அந்தப்பெண் என்பது தெரியாது. காமராஜர் சினிமாப்படம் பார்ப்பதில்லை. அதனால் மேக்கப் அலங்காரங்களுடன் வந்திருந்த பத்மினி அவருக்கு ஆச்சரியமாக இருந்தார்.

அருகில் நின்றவரிடம் யார் அந்த அம்மா? எனக்கேட்டார்.

அவர்தான் பிரபலமான சினிமா நடிகை. பிரசாரக் கூட்டத்தில் பேசுவதற்கு அழைத்துவரப்பட்டுள்ளார் எனச் சொன்னதும் - காமராஜர் அந்த அம்மாவுக்கு இங்கே என்ன வேலை. அவர்களுக்கு ஸ்ரூடியோவில்தானே வேலை அவர்களை போகச்சொல் என்றார்.

பத்மினியும் இறங்கிப் போய் விட்டார்.

கடந்த சனிக்கிழமை 27 ஆம் திகதி ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதும் அவரது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆதரவாளர்கள் நடத்தத் தொடங்கியிருக்கும் அராஜகங்களும் வன்முறைகளும் காமராஜரை இச்சந்தர்ப்பத்தில் நினைக்கச் செய்கின்றன.

1967 இல் நடந்த சட்டசபைத் தேர்தலில் காமராஜர் அவரது சொந்தத் தொகுதியான விருது நகரில் தோற்கடிக்கப்பட்டு அண்ணாத்துரையின் தலைமையில் தி.மு.க. தமிழகத்தில் ஆட்சிபீடமேறியது.

அண்ணாத்துரை - கருணாநிதி - எம்.ஜி.ஆர் - எஸ்.எஸ்.ஆர். - எம்.ஆர்.ராதா - சிவாஜி கணேசன் - முரசொலிமாறன் உட்பட பலர் தமிழ் சினிமாவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டே அரசியலில் பிரவேசித்தனர்.

இவர்களில் நடிகவேள் எம்.ஆர்.ராதா தந்தை பெரியாருடனே தனது அரசியலை மட்டுப்படுத்திக் கொண்டவர். அதனால் அவர் பெரியார் போன்றே தேர்தல்களில் சட்டசபையில் நம்பிக்கை வைக்கவில்லை.

ஆரம்பத்தில் காங்கிரஸிலிருந்த எம்.ஜி.ஆர். தி.மு.க.வுக்கும் தி.மு.க.விலிருந்த சிவாஜி காங்கிரஸுக்கும் சென்றார்கள்.

எம்.ஜி.ஆர். 1967 இல் பறங்கிமலையில் தேர்தலில் நின்ற பொழுது பெற்றால் தான் பிள்ளையா படம் தொடர்பான விவகாரத்தில் ராதாவினால் சுடப்பட்டு மருத்துவ மனையிலிருந்து கொண்டே தேர்தலில் வென்றவர்.

ராதா சிறை சென்றார்.

எம்.ஜி.ஆரை அண்ணாத்துரை தமது தி.மு.க. வின் வாக்கு வங்கியைப் பெருக்குவதற்காகவே தன்னோடு வைத்துக்கொண்டார்.

அண்ணாத்துரை மறைந்தபொழுது முதலமைச்சராக வந்திருக்க வேண்டியவர் நாவலர் நெடுஞ்செழியன். ஆனால் பொதுக்குழுவில் கருணாநிதியை முன்மொழிந்தவர் எம்.ஜி.ஆர்.

அதன் பின்னர் தி.மு.க.வின் மூத்த தலைவர்களான பேராசிரியர் அன்பழகன் - நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோருக்கு முதல்வர் பதவி என்பது எட்டாத கனியாகியே விட்டது.

கருணாநிதி சாணக்கியசாலி. ஆனால் அவரது சாணக்கியம் சிவாஜி - எஸ்.எஸ். ராஜேந்திரன் - கண்ணதாசன் - நாவலர் - அன்பழகன் ஆகியோரிடம் பலித்தது போன்று எம்.ஜி.ஆரிடம் பலிக்கவில்லை.

எம்.ஜி.ஆர். தி.மு.க. வின் பொருளார் பதவியிலிருந்து கொண்டே கருணாநிதியிடம் கணக்குக் கேட்டார். அன்று தொடங்கிய கணக்கு - ஊழல் விவகாரம் கடந்த 27 ஆம் திகதி ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்குத் தீர்ப்பு வரையில் சாபமாகத் தொடர்கிறது.

அதன் அடுத்த அத்தியாயம் கனிமொழி - ராசாவிலிருந்து மீண்டும் தொடங்கும்.

கணக்கு கேட்டவரை கட்சிக்குள்ளே வைத்திருந்து கணக்கைக் காண்பித்து காரியம் சாதிக்கத் தவறிய கருணாநிதி அவரை வெளியே தள்ளினார்.

எம்.ஜி.ஆர் அடுத்து என்ன செய்யப் போகிறார்? என்று பத்திரிகையாளர்கள் அவரைத் தேடியபொழுது அவர் தமது சத்யா ஸ்ரூடியோவில் மறைந்திருந்து தமது அந்தரங்க உதவியாளர் ஆர்.எம். வீரப்பனுடன் மந்திராலோசனை மேற்கொண்டவாறு உலகம் சுற்றும் வாலிபன் பட எடிட்டிங்கில் இருந்தார்.

அந்தப் படம் வெளிவராது என்றும் எம்.ஜி.ஆர். அதில் நடித்த லதா என்ற நடிகையுடன் வாழ்க்கை தொடங்கிவிட்டார் என்றும் கருணாநிதியின் ஆதரவாளர்களும் ஆதரவு ஏடுகளும் வதந்திகளை பரப்பினர்.

அத்துடன் கருணாநிதியின் தீவிர ஆதரவாளரான மதுரை (சண்டியர்) மேயர் முத்து கூட்டங்களில், யாரிடம் கேட்கிறாய் கணக்கு? சரோஜா தேவியிடம் கேள் - ஜெயலலிதாவிடம் கேள் -. லதாவிடம் கேள் என்றெல்லாம் மட்டரகமாகப் பேசினார்.

எம்.ஜி.ஆர். உலகம் சுற்றும் வாலிபனை திரையிட்டு விட்டு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி அண்ணா தி.மு.க. உதயம் என்று அறிவித்தார்.

அப்போது எம்.ஜி.ஆரை விமர்சித்து வந்த கவிஞர் கண்ணதாசன் எம்.ஜி.ஆரின் அண்ணா தி.முக. நூறு நாட்கள் மாத்திரமே ஓடும் என்றார்.

தி.மு.க.வினர் தமிழ்நாட்டை தமிழன்தான் ஆளவேண்டும். மலையாளி வேண்டாம் என்றெல்லாம் பிரதேசவாதம் கக்கினர்.

எம்.ஜி.ஆர். காலத்துக்குக் காலம் தனது கதாநாயகிகளை திரையில் மாற்றிக் கொண்டிருந்தவர்.

ஆரம்பத்தில் வி.என்.ஜானகி. (இவர் கணபதிபட் என்ற நாடக - திரைப்பட நடிகரின் முன்னாள் மனைவி) கணபதி பட்டை பிரிந்து வந்து எம்.ஜி.ஆருடன் இணைந்து கொண்டார்.

ஜானகி எம்.ஜி.ஆரின் துணைவியாக அறிவிக்கப்பட்டதும் அவர் சினிமாவிலிருந்து ஒதுங்கினார். அதன் பின்னர் பானுமதி அவருக்குப் பின்னர் சரோஜா தேவி (எங்கவீட்டுப் பிள்ளை இலங்கையிலும் தமிழகத்திலும் வெளியான ஒரே காலப்பகுதியில் எம்.ஜி.ஆர். தம்முடன் இலங்கைக்கு அழைத்து வந்தது சரோஜா தேவியைத்தான்.)

சரோஜாதேவிக்குப் பின்னர் பந்துலுவின் ஆயிரத்தில் ஒருவன் முதல் ஜெயலலிதா. அதன் பின்னர் மஞ்சுளா பின்னர் லதா என்று வருடாந்த ஒப்பந்த நடிகைகளாக மிளிர்ந்தனர்.

இவர்களில் ஜெயலலிதா மாத்திரமே தன்னை அரசியலில் வளர்த்துக்கொண்ட ஆளுமையுடைய பெண். அதற்கு அவரது ஆங்கிலக் கல்வி பின்புலமும் பலமாக இருந்தது.

அவரது தாய் சந்தியா எம்.ஜி.ஆர். - சிவாஜி படங்களில் நடிக்கும் காலத்தில் ஜெயலலிதா குழந்தை. தாயுடன் படப்பிடிப்பு தளங்களுக்கு வரும்பொழுது சிறுமியாக இருந்தவர் காலப்போக்கில் எம்.ஜி.ஆர். சிவாஜியுடன் இணைந்து கதாநாயகியாக உயர்ந்தவர்.

மலையாள நடிகர் சோபன் பாபுவுடன் அவருக்கு காதல் ஏற்பட்டபொழுது அவர் ஏற்கனவே திருமணமானவர் என்பது தெரிந்தும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர். ஒரு கட்டத்தில் சோபன் பாபுவுடன் ஏற்பட்ட மனக்கசப்பினால் அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைகளை விழுங்கி தற்கொலை செய்ய முயன்றார். அவரை மருத்துவமனையில் பார்த்து ஆறுதல் சொன்ன எம்.ஜி.ஆர். அதன் பின்னர் அவரை தமது பாதுகாப்பிலேயே வைத்துக்கொண்டார். அன்று முதல் ஜெயலலிதாவின் இதய தெய்வமானார் எம்.ஜி.ஆர்.

அண்ணா தி.மு.க.வில் தமது மனைவி ஜானகிக்குக்கூட வழங்காத விசேட அனுமதியை ஜெயலலிதாவுக்கு வழங்கி கொள்கை பரப்புச் செயலாளராக்கினார்.

அந்த நன்றிக்கடனுக்காகவே எம்.ஜி.ஆர். மறைந்த பொழுது அவரது பூதவுடல் புறப்பட்ட வண்டியிலிருந்து அவர் பலவந்தமாக ஜானகி ஆதரவாளர்களினால் இறக்கப்பட்ட வேளையிலும் தான் உடன்கட்டை ஏறப்போவதாகச் சொன்னார்.

நல்லவேளை எம்.ஜி.ஆர். தகனம் செய்யப்படவில்லை. அவர் மெரீனா கடற்கரையில் அடக்கம் செய்யப்பட்டார். ஜெயலலிதாவுக்கு அந்தப் பாக்கியம் சித்திக்கவில்லை.

எம்.ஜி.ஆருக்கு நெருக்கமாகவிருந்த போதிலும் அவருக்கு விசுவாசமாக ஜெயலலிதா நடந்தவரில்லை என்பதற்கும் பல சம்பவங்கள் இருக்கின்றன. ஜெயலலிதாவை விட்டு விட்டு அவர் மஞ்சுளாவுடனும் லதாவுடனும் உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பிற்காக ஜப்பானில் நடந்த எகஸ்போ 70 உலகக் கண்காட்சிக்கு சென்றபொழுது அதனை முறையிட கருணநிதியை நாடியவர் ஜெயலலிதா. பின்னாளில் ராஜிவ் காந்தியிடம் எம்.ஜி.ஆர். பற்றிய புகார்களை அடுக்கியவர்.

ஏற்கனவே ஆண்களினால் வஞ்சிக்கப்பட்ட ஜெயலலிதா தன்னிடம் ஆண்கள் நெருங்காமலிருக்க பார்த்துக்கொண்டார்.

கருணாநிதி ஆட்சியில் துரை முருகன் அவரது சேலையை இழுத்து அவமானப்படுத்திய பொழுது தனது கட்சி அங்கத்தவர் செங்கோட்டையனைப் பார்த்து அவனைஅடிடா என்று குரல்எழுப்பியவர்.

ஆண்கள் - அவர்கள் எந்தப் பெரிய மனி தர்களாக இருந்தாலும் அவர்களை தன்னிடம் அண்டவிடாமல் பார்த்துக்கொண்ட அதே சமயம் அந்த ஆண்கள் தனது காலில் விழுந்து எழுவதையும் அங்கீகரித்தவர்.

தனது ஆட்சியின்பொழுது ஒரு கணக்காய்வாளருக்கு அடிக்க செருப்பைத் தூக்கியவர்.

இலங்கை அரசியலிலும் புலிகள் விடயத்திலும் அவருக்குப் பல முகங்கள். சமகாலத்தில் - தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பேரறிவாளனின் தாய் அற்புதம்மாளுக்கு தேறுதல் சொன்ன நாட்கள் பறந்து செல்வதற்கு முன்னர் தமது சொத்துக்குவிப்பு வழக்கில் தோன்றும்பொழுது புலிகளினால் தமக்கு ஆபத்துவரலாம் என்று கூடுதல் பாதுகாப்பு கோரியவர்.

ஜெயலலிதாவின் இந்த பன்முகப்பட்ட முகத்தை நாடு கடந்த தமிழ் ஈழக் கொழுந்துகளும் அகில உலக தமிழ்த் தீவிரவாதிகளும் புரிந்துகொண்டால் சரி.

சீமான் - வை.கோ - ராமதாஸ் - நெடுமாறன் உட்பட பல ஈழ ஆதரவுக்காரர்களைப் பற்றி சொல்வதற்கு ஒன்றுமில்லை. அரசியலில் எதிரியும் இல்லை - நண்பரும் இல்லை. அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா என்பது போன்ற பஞ்ச் வார்த்தைகள் இவர்களைப் பொறுத்தவரையில் தொடரும்.

ஈழப்பிரச்சினையில் தமிழகத் தலைவர்களும் மே 17 இயக்கம் உட்பட பல அமைப்புக்கள் வரையிலும் நம்பிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதல் புலன் பெயர்ந்து வாழும் நாடுகடந்த தமிழ் ஈழக் கொழுந்துகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்காக உலகெங்கும் கிளைகள் அமைத்துக் கொண்டிருப்பவர்களும் தொடர்ந்தும் இவர்களை நம்பியிராமல் ஈழ மக்களுக்கு அவர்கள் போருக்குப் பின்னர் வாழ விரும்பும் நிம்மதியான வாழ்வுக்கு பக்கபலமாக இருப்பதே காலத்தின் தேவை.

ஜெயலலிதா முதல்வராக இருந்த பொழுது அவரைச் சந்திக்க விரும்பிய வடமாகாண சபை முதல்வர் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு கடந்த 27ஆம் திகதிக்குப் பின்னர் புதிய ஞானம் பிறந்திருந்தால் அதில் ஆச்சரியமில்லை.

# வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்களை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் மூன் கோரிக்கை



(நியூயோர்க்)

வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த அரசு தவறாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை உட்பட ஐக்கிய நாடுகள் சபைக்கு, இலங்கை விசுவாசமாக செயற்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவினரை நியூயோர்க்கில் வைத்து சந்தித்த போது மூன் இதனை வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் இதனை இலங்கையின் ஊடகம் ஒன்றுக்கு மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகளின் சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் எதிர்ப்பை காட்டி வருகிறது. இந்த நிலையில் குறித்த விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு பான் கீ மூன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கோரியுள்ளார்.

இதேவேளை மதத்தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து மூன் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் பான் கீ மூனுடனான சந்திப்பு தொடர்பில் இலங்கையின் ஜனாதிபதி அலுவலகமும் உறுதிப்படுத்தியுள்ளது.

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் சலசலப்பு

## மாணவர்கள் போராட்டம் கைவிடப்பட்டது

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிய கட்டடமொன்றை திறந்து வைப்பதற்கு சென்ற உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரினால் நீர் தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பலாங்கொடை பம்பஹின்ன பகுதியில், சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட விடுதியை திறந்து வைப்பதற்காக இன்று காலை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அங்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மாணவர்களுக்கும் உயர்கல்வி அமைச்சருக்கும இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையொன்றின் போது அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.

இதையடுத்தே பொலிஸாரினால் நீர் தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# அரசியல் யாப்பில் புதிய திருத்தங்கள் வரைபு செய்கிறது ஜாதிக ஹெல உறுமய

## விரைவில் வெளியிடவும் ஏற்பாடு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய முன்வைக்கும் அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது விட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய அமைச்சர்களுடன் பிரிந்து செல்லப்போவதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வண. அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய தனது அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளை வரும் 14ஆம் திகதி கொழும்பில் வெளியிடவுள்ளது. எனினும் இந்த அரசமைப்பு சீர்திருத்த யோசனையில் கூறப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அரசாங்கம் நீக்குமா என்பதில் தமக்கு சந்தேகம் நிலவுவதாகவும் அவர் கூறினார். அத்துடன் இந்த விடயம் குறித்துப் பல கட்சிகளுடன் தங்கள் கட்சியினர் பேசி வருகின்றனர் என்றும் நாட்டுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்கக்கூடிய விதத்தில் இந்த யோசனைகள் தயாரிக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

இந்த யோசனையில் ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் இரண்டையும் ஒன்றாக நடாத்த வேண்டும் என்பதுடன் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தக்கூடிய யோசனைகள் அடங்கியுள்ளன. என்றும் இவற்றை அரசாங்கம் ஏற்காது விட்டால், அரசாங்கத்துக்குள் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்பதை தன்னால் உறுதியாக கூறமுடியும் என்றும் ஏனெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 5 அமைச்சர்கள் தங்களுடன் இணைந்து அரசாங்கத்திலிருந்து விலகுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

# பொருத்தமான ஆலோசனைகளை மட்டுமே கவனத்தில் எடுத்துக்கொள்ள முடியும்

## ஜனாதிபதி ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமற்போன நபர்கள் தொடர்பான விசாரணைகளுக்காக பொருத்தமான ஆலோசனைகளை மட்டுமே ஆணைக்குழு கருத்தில் எடுக்கும் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நிபுணர் குழுவில் இடம்பெற்றுள்ளவர்களின் ஆலோசனைகள் பொருத்தமானதாகவும், பயனுள்ளதாகவும் காணப்பட்டால் மாத்திரமே அவற்றை பரிசீலிப்போம் என காணாமற்போனோர் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழு தனது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் செவிமடுக்காவிட்டால் அதனுடன் தொடர்ந்து பணியாற்றுவது அர்த்தமற்றது என இந்திய மனித உரிமை பணியாளர் அவ்டேஸ்கவுசல் தெரிவித்துள்ள நிலையிலேயே இந்தக்கருத்து வெளியாகியுள்ளது. அவர்கள் ஆலோசனை குழுவை சேர்ந்தவர்களே, ஆலோசனை வழங்குவதற்கே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்க விரும்பினால் வழங்கலாம் ஆனால் அவை பொருத்தமானதாகவும், பயனுள்ளதாகவும் காணப்படவேண்டும்.

ஏனெனில் இறுதியில் அறிக்கையை தயாரிக்கப்போவது ஆணைக்குழுவே. என ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# இரட்டைக்குடியுரிமை வழங்க நெகிழ்ச்சித்தன்மையான நடைமுறை

## அடுத்த ஆண்டு முதல் அமுலாகும்

(ரோம்)

இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையில் நெகிழ்ச்சித்தன்மை பின்பற்றப்படவுள்ளது.

இரட்டை குடியுரிமை வழங்கும் புதிய நடைமுறை விரைவில் அமுல்படுத்தப்பட உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இத்தாலியில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இரட்டை குடியுரிமை வழங்கும் புதிய நடவடிக்கைகள் அமுலுக்குக்கொண்டு வர எதிர்பார்க்கின்றோம்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற றுக்கு தீர்வு வழங்கும் நடவடிக் கைகளை அரசாங்கம் ஏற் கனவே ஆரம்பித்துள்ளது.

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் ஓய்வூதியததை பெற்றுக்கொள்ளத்தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வெளிநாடுகளிலிருந்து ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளத் தேவையான சட்டங்கள் உருவாக்கப்படும். போரின் பின்னர் வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இன்னும் சில நாட்களில் யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணம் வரை பயணிக்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இத்தாலி மிலானோ நகரின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஹெரோயின் விற்பனை நால்வர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நால்வர் ஹெரோயின் பொதியுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக சிலாபம் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வென்னப்புவ உள்ளிட்ட பகுதிகளில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வென்னப்புவ - வடக்கு ஹால்தடுவன பகுதியில் 26 வயது இளைஞன் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார். 22, 24, 41 வயதுடைய ஏனைய மூன்று சந்தேகநபர்களும் வென்னப்புவ உல்ஹிட்யாவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் பொதிகளும் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# ஜனாதிபதித்தேர்தலில் சந்திரிக்கா; மாறுகிறது தேர்தல் கள வியூகம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க போட்டியிட்டால், ஆதரவளிக்கத் தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இரண்டு தரப்பிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

சிறுபான்மை மக்களின் ஆதரவினை பெற்றுக்கொள்ளக் கூடிய பொது வேட்பாளராக சந்திரிகா அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முயற்சிகளில் ரணில் விக்ரமசிங்கவைப் போன்றே சந்திரிகாவும் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்குமா என்பது சந்தேகமே எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மூனறாவது தடவையாகவும் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதில் சந்திரிகாவும் சட்டச் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடலாம் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# பதவி விலக துணிவாரா மேர்வின்?



(கொழும்பு)

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தனது பதவியை துறக்கத் தீர்மானித்துள்ளதாக உத்தியோகப் பறறற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெஹலியகொட பிரதேசத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான கிளைக் காரியாலய அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது, அமைச்சர் மேர்வின் சில்வா இது பற்றிக் கருத்துரைத்துள்ளார். பெரிய வாகனம் கிடைத்தது. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் அமர்த்தப்பட்டார் கள் என்பதற்காக ஓணானின் நிலைமைக்கு வீழ்ந்துவிடக்கூடாது. அவ்வாறான ஓணான்கள் இந்த அரசாங்கத்திலும் உண்டு. எனினும் நான் அவ்வாறான ஓர் பாத்திரமல்ல.

மக்களின் தேவைகளை என்னால் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காவிட்டால் எனக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் பாதுகாப்பு அவசியமில்லை. எனக்கு வாகனங்கள் உண்டு பாதுகாப்புக்கு மக்கள் இருக்கின்றார்கள்.

ஒரு ஆண்டும் இரண்டு மாதங்களும் எனக்கு பணியாற்ற அனுமதியளிக்கப்படவில்லை. அது எனக்கு கவலையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் மக்கள் சேவைகடு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காவிட்டால், அமைச்சுப் பதவியில் இருப்பதில் பயனில்லை.

உங்களுக்காக நான் அமைச்சுப் பட்டத்தை துறந்து விடுவேன் நண்பர்களே என அமைச்சர் மேர்வின் சில்வா உணர்ச்சி பொங்க பெஹலியகொட கூட்டத்தில் தெரிவித்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கைதடி மேற்கு கலைவாணி வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வில் விருந்தினர்கள் மங்களவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் பாடசாலை அதிபர் சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்ட சிறுவர்களையும் காணலாம். (51)

# வாழ்வின் ஆளுமையை அதிகரிக்க கல்வியில் அக்கறை காட்ட வேண்டும்

## யாழ்.வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(திருநெல்வேலி)

இலவச சீருடை இலவசப் பாடப்புத்தகங்கள், இலவச மதிய உணவு, இலவச கற்றல் உபகரணங்கள் என அனைத்தையும் இலவசமாகப் பெற்றுக் கொண்டாலும் இலவசமாகக் கல்வியைப் பெற்றுக்கொள்வது என்பது முடியாத காரியம்.

கல்வி என்பது எமது செல்வம் அதுதான் எமக்கு உயிர் மூச்சு. கல்வியில் சிறந்து விளங்குபவனை உலகம் போற்றிப் புகழும் எனத் தெரிவித்த யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், பல பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகக் காணப்படுவதற்கு அம்மாணவர்களின் குடும்பத்தின் வறுமை நிலையே காரணம் எனத் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற கோப்பாய் மகா வித்தியாலயத்தில காலி மற்றும் நல்லூர் றோட்டறிக் கழகங்கள் இணைந்து மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், சப்பாத்துக்கள், புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய முதல்வர் த. ஞானபபிரகாசம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர், சீருடை அணிந்து பாடசாலைக்கு வரவேண்டும் என நாங்கள் ஏன் வற்புறுத்துகிறோம் என்றால் சீருடையோடு சப்பாத்து, கழுத்துப்பட்டி அணிந்து ஒரு மாணவன் நடந்து வரும் போது அவனது ஆளுமை அதிகளவில் அதிகரிக்கிறது என்பது உணரப்பட வேண்டும்.

இக்காலத்திலே காலணிகளை வாங்குவது என்பது ஒரு குடும்பத்துக்கு மிகப் பெரிய பொருளாதார சுமையாகும். அதனை உணர்ந்து பொருத்தமான பாடசாலை ஒன்றைத் தெரிவு செய்தமைக்காக காலி மற்றும் நல்லூா றோட்டறிக் கழகங்களுக்கு யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் சார்பாக எனது நன்றிகளைத தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாணவனது கம்பீரத் தோற்றம், தொடர்பாடல், சிறந்த பண்பு போன்றவை அவனது பாடசாலைக் காலத்திலேயே ஆரம்பிக்கவேண்டும். பெரிய பாடசாலையில் சேர்ந்து கல்விகற்க முடியாமையின் காரணமாகவே இங்குள்ள பிள்ளைகள் இப் பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்கள் மிகச் சிறந்த எதிர்காலத்தைக் கொண்டுள்ளார்கள். நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு நிகராக கிராமப் பாடசாலைகளும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று முன்னேற்றகரமான முறையில் வருவதைப பார்க்கக்கூடியதாக உள்ளது.

பெற்றோர்கள் பிள்ளைகளை வழிநடாத்தினார்கள். பிள்ளைகள் பெற்றோர்களை வழிநடாத்தும் காலமும் உள்ளது. ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளை படித்தால் ஏனைய பிள்ளைகளும் நன்றாகப் படிக்கும். சர்வதேச அங்கீகாரம் கொண்ட றோட்டறிக் கழகங்கள் தொடர்ந்தும் எமது ஏழை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவிட முன்வர வேண்டும் எனக் கூறினார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை வித்தியாலய பிரதி அதிபர் திருமதி.ஜெ.சேவற்கொடியோன் நிகழ்த்தினார். கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா, கிராம உத்தியோகத்தர் எஸ்.பாலசுப்பிரமணியம், பாலி றோட்டறிக் கழகத்தலைவர் வை.கீர்த்திடயஸ், நல்லூர றோடடரிக் கழகத்தலைவர் ரீ.ரவீனதாஸ், றோட்டரியன் மோகன்ராஜ் மற்றும் பலர் உரையாற்றினர். (137)

# மீண்டும் வழிபாடுகள் ஆரம்பம்

அச்சுவேலி, வளலாய் நாகதம்பிரான் ஆலயத்தில் கடந்த 23 வருடங்களின் பின்னர் மீண்டும் கடந்த வியாழக்கிழமை பூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையினைத் தொடர்ந்து அப்பிரதேச மக்கள் தமது வாழ் விடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் வசித்து வந்த காரணத்தினாலேயே இவ் ஆலயம் கவனிப்பாரற்று பற்றைகள் மண்டிக்காணப்பட்டன.

மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்கள் இந்த ஆலயம் தொடர்பில் எந்த வித நடவடிக்கையும் எடுக்காது விட்டிருந்தனர். எனினும் இவ் ஆலய புனரமைப்பு தொடர்பில் ஆலயத்தினர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருடன் தொடர்பு கொண்டதனையடுத்து இவ் ஆலய புனரமைப்பு மற்றும் மின்னிணைப்பு என்பவற்றுக்கு அவர் உதவி வழங்கியிருந்தார். அமைச்சரின் நிதிப்பங்களிப்புடன் ஆல யத்தின் புனரமைப்பு மற்றும் மின்னிணைப்புகள் என்பன பூர்த்தி செய்யப்பட்டு ஆலய பூசை வழிபாடுகள் தற்போது இடம்பெற்று வருவதாக மேலும் தெரிய வருகின்றது. (85)

## முரசின் இன்றைய பலன்



(06.10.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 20 ஆம் திகதி.
சித்தயோகம் / திரயோதசித்திதி.
சதய நட்சத்திரம் பி.பகல். 01.14 வரை. பின் பூரட்டாதி.
இராகு காலம 07.32 - 09.02 வரை. சுபநேரம 12.02 - 01.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நியாயத்தின்படி செயற்பட்டதால் சந்தோஷம் கிட்டல், சொத்துப்பகிர்வு சம்பந்தமாக பிள்ளைகளிடம் சுமுக நிலை ஏற்படல். |
| ரிஷபம் | திருமணம் நடைபெற வேண்டுமென்ற ஆதங்கத்தில் தெய்வ சந்நிதிக்கு செல்லல், நோய் குணமடைய குருதி நன்கொடை செய்யமுன்வந்தவரைப் பாராட்டுதல். |
| மிதுனம் | சனீஸ்வரன் ஐந்தில் இருப்பதினால் ஏற்பட்ட குழந்தைப் பாக்கிய நிலைக்கு இறைவனை மன்றாடுதல், வழுக்கி வீழ்ந்த வேளை அங்கத்திற்கு பாதிப்பு ஏற்படாது அதிர்ஷ்ட வசமாக தப்பிவிடல். |
| கடகம் | தாயாரின் தேகநலம் எதிர்பாராமல் நலமடைந்ததை எண்ணி மகழ்வுறல், பிரயாணத்தின் போது சிக்கல்கள் ஏற்படல். |
| சிம்மம் | ஞாபகமறதியினால் பணத்தைச் சரியாகக்கணக்கிட்டுப் பெறாது விடல், பழைய மனையை அழித்து புதிதாக அமைக்க வெளியூரிலிருந்து பணவரவை எதிர்பார்த்தல். |
| கன்னி | தகவல் கிட்டாதவரைப் பற்றி அறிய முற்பட்டதால் மகிழ் வேற்படல், பரீட்சைமுடிவில் பாதிப்பு ஏற்பட்டவேளை கண்டிப்பைக்கைவிட்டு விடல். |
| துலாம் | பலவேலைகளையும் ஒரே நாளில் பார்க்க முற்படாது தவிர்க்கவும், யதார்த்தவாதியாக இருந்தமையினால் உண்மையைக்கூறி பகைமையை வளர்த்தல். |
| விருச்சிகம் | ஏழரைச்சனி இருப்பதினால் வெளியூர் பயணம் மேற்கொள்ள மனையாள் விரும்பாமை, செய்தொழிலில் போதிய கவனம் எடுப்பதினால் பிசகின்றி கருமம் நடைபெறல். |
| தனுசு | வீண்வாக்குவாதங்களைக் கைவிட்டு காரியத்தைச் சாதகமாக்கிக் கொள்ளுங்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் மகிழ்வுடன் ஈடுபடுவீர்கள். |
| மகரம் | அநாமதேய தொலைபேசி இரவில் அலறியதினால் அச்சமடைதல், விவாகமுயற்சிக்காக பத்திரிகை மூலம் விளம்பரம் செய்ய எண்ணமிடல். |
| கும்பம் | பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரும்போது பொறுமையைக் கைவிடவேண்டாம், அரசபணியாளர்கள் மேலதிகாரிகளுடன் அனுசரித்துப்போகவும். |
| மீனம் | ஆவணங்கள் இன்றி வாகனத்தை செலுத்தியதால் தண்டம் கட்டல், வெளியூர் பயணம் இலக்கினை அடைய வைத்தல். |

## ஆசிரியர் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்


ஆசிரியர் என்பவர் ஓர்
ஆலோசகர், நிபுணர், நற்பண்புகளை
போதிப்பவர், நல்லொழுக்கம் பேணுபவர்
(ஓ.ஏ.டயிஸர்)

பிள்ளைகளின் சிந்தனையை
எழுச்சி பெறச் செய்பவர்
கற்றல் முறைகளைத் திட்டமிட்டுச்
செயற்படுத்துபவர்
(மயிகல் ஸ்மித் மூவர்)

ஆசிரியர் சமூகத்தின் பிரதிநிதி,
நல்லொழுக்கத்தை வளர்ப்பவர்,
ஒரு நீதிபதி, ஒரு மதிப்பீட்டாளர்,
முன்மாதியான ஒருவர், ஒரு நண்பன்,
ஒரு நம்பிக்கையாளர்.
(எரிக்றொயின்)

ஆசிரியர் சமூகத்தை பிரதிநிதித்துவம்
செய்யும் ஒருவர் அவர்
ஒரு சொல்வளம், ஒரு நீதிபதி,
ஓர் உதவியாளர், தீர்மானம்
எடுப்பவர், இரகசிய பரிசோதகர்,
ஒரு குழுத்தலைவர், பெற்றோர்களுக்காக
செயற்படுபவர் நண்பர்.
(றெட்ல வெற்றன் பர்க்)

## கருவறைத் தெய்வம்




அறியாமை இருள் நீக்கி
அருள் ஒளி கொடுத்து
ஏட்டுக் கல்வியோடு
நல் ஒழுக்கங்களையும் போதிக்கும்
ஆசிரிய தெய்வங்களே!
வாழ்க பல்லாண்டு....

கல்விக் கூட கோவில்களின்
கருவறைத் தெய்வங்களே
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
தொழுகின்றோம் - நும்
பணி சிறக்கட்டும்
வாழிய... பல்லாண்டு வாழியவே....

கை.சிவனுகாயினி
பிரிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரி

# களத்திற்கு வெளியில்...

கடந்த 7 ஆண்டுகளில் நான் நிறைய பாடம் கற்றிருக்கிறேன். ஆரம்ப காலங்களில் ஹைய்டன், மைக் ஹசி மற்றும் எங்களது பயிற்சியாளர் ஸ்ரீபன் பிளமிங் ஆகியோர் உதவியாக இருந்தனர். இதனால்தான் நான் முதிர்ச்சி அடைய முடிந்தது. இந்திய அணியில் கோலியின் ஆட்டத்தை பார்த்து நிறைய கற்றிருக்கிறேன். நிலைத்து நின்று அதிரடியாக விளையாடி சதம் அடிப்பது பற்றி அவரிடம் இருந்து கற்று கொண்டேன். என்னுடன் ஜோடி சேர்ந்து விளையாடியவர்களில் கப்டன் டோனி மறக்க முடியாதவர் ஆவார். யுவராஜ் சிங் பெயரையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆட்டத்தை எப்படி முடிப்பது என்பது பற்றி அவரிடம் கற்றிருக்கிறேன்.

**சுரேஷ் ரெய்னா (சென்னை அணி வீரர்)**

ஐ.பி.எல். மற்றும் சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 போட்டியை சேர்த்து இதுவரை 7 முறை இறுதிப்போட்டிக்கு நுழைந்துள்ளோம். இதில் 4 முறை கோப்பையை கைப்பற்றியுள்ளோம். கடைசியாக விளையாடிய 2 இறுதிப்போட்டியில் (2012 மற்றும் 2013 ஐ.பி.எல்.) தோற்றோம். தற்போது இறுதிப்போட்டியில் கொல்கத்தாவை வீழ்த்தி கோப்பையை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்கு ரெய்னாவின் அதிரடி ஆட்டமே காரணம். அவர் கடைசி வரை நிலைத்து நின்று அணியை வெற்றி பெற வைத்தார். இளம் வீரர் நெகி சிறப்பாக பந்து வீசினார். ஒட்டு மொத்தமாக இந்த ஆட்டம் எங்களுக்கு நன்றாக அமைந்தது. நாணயச் சுழற்சியில் வென்றது சிறப்பானதாகும்.

**டோனி (சென்னை கப்டன்)**

எங்கள் அணியில் இருக்கும் ஒவ்வொருவரும் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். இதற்காக நாங்கள் பெருமைப்பட வேண்டும். இந்தப் பயணம் இத்துடன் முடிந்துவிடுவதில்லை. 180 ஓட்டங்கள் போதுமானதே. ஆனால், 2ஆவது இனிங்ஸில் பனிப்பொழிவு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. இறுதிச் சுற்றுக்கு முன்னேறியதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். அடுத்து வரும் தொடர்களிலும் இது போன்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி கிண்ணத்தைக் கைப்பற்றுவோம். தேசிய அணியில் இடம்பிடிப்பது குறித்து நான் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. நான் சிறப்பாக ஆடி வருகின்றேன். சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடரில் என்னுடைய ஆட்டத்திறன் சிறப்பான முறையில் வெளிப்பட்டிருக்கின்றது. எனவே அணிக்கு எனது சேவை தேவையா, இல்லையா என்பதை முடிவு செய்வது தேர்வாளர்களேயன்றி நானல்ல.

**கம்பீர் (கொல்கத்தா கப்டன்)**

தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்தியா சார்பில் கிரிக்கெட் அணி பங்கேற்கவில்லை. அவர்களுடைய முடிவுக்கு மதிப்பளிக்கிறேன். அதேநேரத்தில் அவர்களுக்கு போட்டியை வளர்க்க வேண்டும் என்பதில் ஆர்வமில்லை. கிரிக்கெட்டை பணம் சம்பாதிக்கும் தொழிலாகவே நடாத்துகிறார்கள் என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 9,700 பேர் பங்கேற்ற இந்தப் போட்டியில் இதுவரை 7 பேர் மட்டுமே ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியுள்ளனர். இதுதவிர சில உலக சாதனைகளும், ஆசிய சாதனைகளும் படைக்கப்பட்டுள்ளன. நடுவரின் பாரபட்ச தீர்ப்பு தொடர்பாக இந்திய குத்துச்சண்டை வீராங்கனை சரிதா தேவி உணர்ச்சிவசப்பட்டது புரிந்துகொள்ளக்கூடியதுதான். ஆனால் அவர் பதக்க மேடையில் கதறியழுது கொண்டு பதக்கத்தை உதறியது தேவையற்றது.

**சேக் அஹமட் அல் பஹாட்**
**(ஆசிய ஒலிம்பிக் சபைத் தலைவர்)**

# விலக்கிக்கொள்ளப்பட்டார் நரைன்



(ஜமேக்கா)

இந்தியாவுக்கெதிரான கிரிக்கெட் தொடரிலிருந்து முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வந்த சுனில் நரைனின் பந்துவீச்சு எறிவது போல இருப்பதாக நடுவர்கள் புகார் செய்தனர். இதையடுத்து, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடனான இறுதிப் போட்டியில் அவர் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்திய அணியுடன் ஒருநாள், ருவென்ரி-20 மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணியிலிருந்து அவர் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


விரைவில் அவர் தனது பந்துவீச்சு முறையை ஆய்வு செய்து, தேவையான மாற்றங்களை மேற்கொள்வார் என்றும் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், முக்கியமான தருணத்தில் அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் விலக்கிக் கொள்ளப்பட்டமை எங்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

பந்துவீச்சு எறிவது போல இருப்பதாக நடுவர்கள் புகார் செய்வதில் பாரபட்சம் இருப்பதாக கருதுகிறோம். சி.எல். ருவென்ரி-20 விதிமுறைகள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளன என்று மே.தீவுகள் அணி முன்னாள் கப்டனும், தேர்வுக் குழுத் தலைவருமான கிளைவ் லொயிட் அதிருப்தி தெரிவித்துள்ளார்.



ஆசிய விளையாட்டு விழாவின் மதிப்புமிக்க வீரருக்கான விருது ஜப்பான் நீச்சல் வீரர் கொசுகே ஹாகினோவுக்கு வழங்கப்பட்டது. இவர் நீச்சல் போட்டியில் 4 தங்கம் உட்பட ஏழு பதக்கங்களை வென்று இந்த விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# சீன ஓப்பன்; இறுதிக்கு முன்னேறியோர்



(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட செக் குடியரசின் பெத்ரா குவித்தோவா தகுதி பெற்றார். அரையிறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசருடன் நேற்று முன்தினம் மோதிய குவித்தோவா 6-3, 5-7, 6-2 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா 6-0, 6-4 என்ற நேர் செட்களில் அனா இவானோவிச்சை (சேர்பியா) வீழ்த்தினார். இறுதிப் போட்டியில் ஷரபோவா, குவித்தோவா மோதவுள்ளனர்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் முதல்நிலை வீரர் ஜோகோவிச் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் ஆண்டி மர்ரேவை (இங்கி.) வீழ்த்தினார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் செக் குடியரசின் தோமஸ் பெர்டிச் 6-4, 6-1 என்ற நேர் செட்களில் ஸ்லோவகியாவின் மார்டின் கிளிஸானை வென்றார். இறுதிப் போட்டியில் ஜோகோவிச், தோமஸ் பெர்டிச் மோதவுள்ளனர்.

இதேவேளை, மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, காரா பிளாக் (சிம்பாப்வே ஜோடி ஆண்ட்ரியா லவக்கோவா (செக்.) , சுவாய் பெங் (சீனா) ஜோடியுடன் நேற்று முன்தினம் மோதியது.

இதில் சானியா ஜோடி 4-6, 4-6 என்ற நேர்செட் கணக்கில் தோற்று இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.



சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடரில் கிண்ணம் வென்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்கள்.

# சம்பியன் லீக்கில் இதுவரை....

(பெங்களூர்)

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடர்களில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இரண்டாவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஆறு முறை நடைபெற்ற இப்போட்டித் தொடர்களில் மும்பை இந்தியன் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகளே இரு முறை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.

சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடர்களில் இது வரை கிண்ணத்தைக் கைப்பற்றிய அணிகளின் விபரம்:

2009 - நியூ சௌத் வேல்ஸ்
2010 - சென்னை சூப்பர் கிங்ஸ்
2011 - மும்பை இந்தியன்
2012 - சிட்னி சிக்ஸஸ்
2013 - மும்பை இந்தியன்ஸ்
2014 - சென்னை சூப்பர் கிங்ஸ்

# தேசிய கால்பந்து அணியில் யாழ். பல்கலை வீரர்




(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் யாழ். பல்கலைக்கழக வீரர் ஞானரூபன் இடம்பிடித்துள்ளார்.

கால்பந்தாட்டத்திலே சிறு வயது முதல் சிறப்பாக விளையாடி வரும் இவர் த்றபோது வலிகாமம் லீக் அணி, யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகம், யாழ். பல்கலைக்கழக அணி, யாழ். மாவட்ட அணி, வட மாகாண அணிகள் போன்றவற்றில் விளையாடி வருகிறார்.

அண்மையில் இடம்பெற்ற பல்கலைக்கழகங்களிற்கிடையிலான போட்டித்தொடரில் யாழ். பல்கலைக் கழகம் சம்பியனாகுவதற்கு பல வழிகளிலும் துணை புரிந்திருந்ததுடன் இலங்கை கால்பந்தாட் தெரிவுக் குழுவின் பார்வையையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார்.

தற்போது இலங்கை பிறீமியர் லீக்கில் இடம் பிடித்துள்ள இவர் தனது விளையாட்டு திறமையினால் இரசிகர்களை தன் வசம் ஈர்த்தவர். இவரது திறமைகளுக்கு சிறந்த அங்கீகாரம் கிடைத்த போதிலும் இன்னும் ஒரு படி மேலாக இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியிலும் இடம்பெற்று யாழ். மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (48)

# ஈட்டி எறிதலில் யாழ். இந்து வீரருக்கு வெள்ளி


(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட ஈட்டி எறிதல் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் வசீகரன் ஜஸ்மினன் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் வசீகரன் ஜஸ்மினன் 6.96 நீளம் பாய்ந்து வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

இதேவேளை 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி வீரர் வ. மதுரன் 48.89 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.





அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி கடந்த 2ஆம் திகதி முதல் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது. நாளை வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் உயரப்புலம் மெ.மி. வித்தியாலய வீராங்கனைகள் மூன்று பேர் 400 மீற்றர் மற்றும் 100 மீற்றர் ஓட்ட போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். இதில் தி. நிரோஜ, இ. ஜனார்த்தினி, த. அஜித்தா ஆகிய மூவருமே தேசியப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். நாளை நடைபெறவுள்ள 400 மற்றும் 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் இவர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள வீராங்கனைகள் அதிபர் கு. திலீபன், உடற்பயிற்சி ஆசிரியர் எஸ். சாந்தன், ஆசிரியர் தர்மரட்ணம் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம். (137)

இதேவேளை நேற்று முன்தினம் வரை நடைபெற்ற போட்டியில் வடமாகாணம் பதக்கப் பட்டியலில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. ஏழு தங்கம், ஆறு வெள்ளி, இரண்டு வெண்கலம் அடங்கலாக 15 பதக்கங்களை கைப்பற்றியுள்ள வடமாகாணம் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. இப்போட்டித் தொடரின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்றைய தினம் நடைபெறவுள்ளதாகவும், இன்னும் ஒரு சில பதக்கங்களை வடமாகாண வீர,வீராங்கனைகள் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய அதிக வாய்ப்பு இருப்பதாகவும் வடமாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த ஆண்டு ஆறாமிடத்தைப் பிடித்துக் கொண்ட வட மாகாணம் இந்தாண்டு நேற்று முன்தினம் வரை பெற்றுக் கொண்ட பதக்கங்களின் அடிப்படையில் ஐந்தாமிடத்தைப் பிடித்துக் கொண்டமையானது எங்கள் மாகாணத்தின் விளையாட்டு வளர்ச்சியை வெளிப்படுத்தி நிற்பதாகவும், இது பெருமன நிறைவைத் தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (48, 93)

## விளையாட்டுச் செய்திகள்

# சாம்பவன், பார்த்தீபன் அபாரப்பந்துவீச்சு கிண்ணம் வென்றது கொக்குவில் கே.சி.சி.சி.

### இறுதிப் போட்டியில் ஞானம்ஸ்

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகம் நடாத்தும் 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஞானம்ஸ் அணி முன்னேறியுள்ளது.

இப்போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி கடந்த 28ஆம் திகதி தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் கரவெட்டி மகேசன் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பாக ஆடிய ரஜீபன் 11 சிக்ஸர்கள் அடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மகேசன் அணி 12.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் கரவெட்டி ஞானம்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இதேவேளை, ஏற்கனவே நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் கரவெட்டி ஐங்கரா அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (12)




(கொக்குவில்)

சாம்பவன், பார்த்தீபன் ஆகியோரின் அபாரமான பந்துவீச்சின் மூலம் கொக்குவில் கே.சி.சி.சி. அணி சென்றலைட்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதின.

இறுதிப் போட்டி நாற்பது ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கே.சி.சி.சி. அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி பார்த்தீபன், சாம்பவன் ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து. இருப்பினும் ஒரு முனையில் விக்கெட் சரிவை நிறுத்திய வினோத்குமார் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கப் போராடினார். இவருக்கு மறுமுனையில் எந்தவொரு வீரரும் ஒத்துழைப்பு வழங்காதமையால் சென்றலைட்ஸ் அணியின் இனிங்ஸ் விரைவில் நிறைவு பெற்றது. இறுதியில் சென்றலைட்ஸ் அணி 21.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினோத்குமார் அதிக பட்சமாக 31 ஓட்டங்களைப் பெற்றார்.

ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்துவீச்சில் பார்த்தீபன் 23 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, சாம்பவன் 18 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, ஜனுதாஸ் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 76 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி ஜெயரூபன், ஜனுதாஸ் ஆகியோரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றி பெற்றது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 10.4 ஓவர்கள் நிறைவில் இரு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெயரூபன் 20, ஜனுதாஸ் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் டார்வின் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் சிறந்த களத்தடுப்பாளராக கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் ஜனுதாஸ், சிறந்த பந்துவீச்சாளராக பார்த்தீபன், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்றலைட்ஸ் அணியின் வினோத்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, யாழ். மாவட்ட கிரிக்கெட் தரம் வளர்க்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே இச்சுற்றுப் போட்டியினை நாம் வருடா வருடம் நடாத்தி வருகின்றோம். இது போன்ற தொடர்களை ஏனைய கழகங்களும் நடாத்தும் பட்சத்தில் வீரர்களின் கிரிக்கெட் தரம் அடுத்த கட்ட நிலைக்குச் செல்வதற்கு ஏதுவாக அமையும் என கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (93,12)

# தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் தமிழ் தேசிய சபையின் பாத்திரம்

**- சாலையூரான் -**



தனது தீவிர அரசியல் முன்னெடுப்புக்கான அதன் புதிய ஏற்பாடாக தமிழ்த்தேசிய சபையொன்றை தமிழ் கூட்டமைப்பு அறிவித்திருக்கிறது.

வடமாகாண சபை உருவாக்கத்துக்குப் பிறகு தமிழ் மக்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்புக்கள் எதுவும் கூட நிறைவேறவில்லை என்கிற முறைப்பாடுகள் தமிழ் மக்களிடையே வலுப் பெற்றிருக்கும் நிலையில் வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் இந்த தேசிய சபையை அமைப்பது பற்றிய அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

தமிழரசுக் கட்சி தனக்கான வாக்கு வங்கிக்கும் அரசியற் பலத்துக்குமாக வெறும் இனத்துவ நிலைப்பட்ட அரசியல் கோஷங்களை மாத்திரமே தனது பயன்படுத்தி வந்திருக்கிறது.

இதில் தனது வாக்கு வங்கியை பலப்படுத்துவதற்கான ஏற்பாடாக விடுதலை இயக்கங்களிலிருந்து உருவான அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டால்தான் முழு தமிழ் மக்களதும் வாக்குகளையும் கவர முடியுமென்ற நிலைமைக்குள் தமிழரசுக் கட்சி தள்ளப்பட்டது.

இது, தமிழரசுக் கட்சியானது அதன் முழுமையான தமிழ் மேட்டுக் குடி நலன்களிலிருந்து தமிழ்ச்சமூகத்தின் பன்முக நலன்களை குறைந்த பட்சமாகவேனும் பிரதிபலிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டமையை சுட்டி நிற்கிறது.

தமிழ் சமூகத்தின் இடைநிலை மற்றும் தாழ்த்தப்பட்ட சமூக அணியினரையும் உள்வாங்கி ஆயுதக் கலாசாரத்துடனும் இந்த அமைப்புக்கள் இருந்ததென்பது... தமிழரசுக் கட்சியை பொறுத்தவரை இது ஒரு வேண்டாவெறுப்பான நிலைமையாகும்.

நிற்க, விடயத்துக்கு வருவோம். எதிர்ப்பு அரசியலின் வழி தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பம் தமிழ் கூட்டமைப்புக்கு இனி ஒரு போதும் கிட்டப் போவதில்லை என்பது தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் பிற்படுத்தப்பட்ட சமூக அணியினருக்கு வெட்ட வெளிச்சமாகி விட்ட நிலையில்...

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தமிழ்க்கூட்டமைப்பின் நிறைவேற்றுத்தரத்தில் இருக்கும் தலைவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்கிற கேள்வியும் இவர்கள் மத்தியில் வலுப்பெற்றிருக்கிறது.

கூடவே, தீர்வை நோக்கிய செயற்பாடுகளுக்கான ஆக்க பூர்வமான செயற்றிட்டங்களில் கட்சித் தலைமை கவனம் செலுத்தவில்லை என்கிற பரவலான முறைப்பாடும் இப்போது வெளியாகி இருப்பது தலைவர்களுக்கு பெரும் தலையிடியாக மாறியிருக்கிறது.

எனவே கட்சியின் கீழ்நிலை அணிகளுக்கு தீர்மானங்களை எடுப்பதில் ஒரு அந்தஸ்தை கொடுக்க வேண்டும் என்கிற வரலாற்று நிர்ப்பந்தம் தமிழ்க்கூட்டமைப்பின் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

வெறும் உணர்ச்சிக் கோஷங்களால் வாக்குகளை பெறலாம் என்கிற நப்பாசையை கைவிட்டு மக்களுக்கு நன்மையளிக்கும் உருப்படியான ஏதாவது காரியங்களை செய்தாக வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் தலைவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை இந்த சபை பற்றிய அறிவிப்பு சுட்டி நிற்கிறது.

கட்சியை பரவலாக்கம் செய்வது என்கிற தோற்றப்பாட்டை காண்பிப்பதன் மூலம் தமது குறுந் தேசிய உணர்வுகளை மறைப்பதற்கான ஒரு முயற்சியாகவே இந்த தமிழ் தேசிய சபை அறிவிப்பு.

இந்த சபையின் உள்ளடக்கங்கள் எதனையும் பற்றி பேசாமல் வெறுமனே சபையொன்றை அமைக்கப்போவதாக மட்டும் தமிழ்க் கூட்டமைப்பினர் அறிவித்திருப்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே தோன்றுகிறது.

# கே.வி. மகாதேவன்



**- பி.ஜி.எஸ்.மணியன் -** **4**

மனோன்மணி" வெளிவந்த அதே 1942 ஆம் ஆண்டு கே.வி. மகாதேவனின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி உண்டு பண்ணிய ஆண்டு என்றே சொல்லவேண்டும்.

அந்த ஆண்டு தான் அவருக்கு தனியாக முழுப் படத்துக்கும் இசை அமைக்கும் மகத்தான வாய்ப்பு கிடைத்தது.

கவிஞர் ச.து. சுப்பிரமணிய யோகியார் அவர்கள் இயக்கத்தில் வெளிவந்த "ஆனந்தன் அல்லது அக்னிபுராண மகிமை" என்ற படத்துக்கு இசை அமைக்கும் வாய்ப்பு. படத்தின் கதாநாயகனாக கிரு'ணகாந்தன் என்பவரும், நாயகியாக பி. சரஸ்வதியும் நடித்தனர். (இதைத் தவிர படத்தை பற்றிய இதர விபரங்கள் கிடைக்கவில்லை). சேலத்தை விட்டு சென்னைக்கு வந்தார் கே.வி. மகாதேவன்.

இந்தப் படத்தின் பாடல்கள் எப்படி இருந்தன? யார் யார் பாடி இருந்தனர்? படம் வெற்றிப்படமா? என்ற விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. படத்தின் பிரதியே புழக்கத்தில் வராமல் வழக்கொழிந்து போய்விட்டிருக்கிறது.

மகாதேவன் இசைஅமைப்பில் வெளியான முதல் படத்தின் இசை அவரது தலைமுறைக் காலத்திலேயே மறக்கடிக்கப்பட்டது காலத்தின் கொடுமைதான்.

எது எப்படியோ ஒரு இசை அமைப்பாளராக கே.வி. மகாதேவனின் வாழ்வு ஆரம்பமாகிவிட்டது.

1944-இல் சி.வி. ராமன் அவர்கள் இயக்கத்தில் "பக்த ஹனுமான்",

1945-இல் மாடர்ன் தியேட்டர்ஸின் "பர்மா ராணி"

ஆகிய படங்கள் வந்த வேகத்திலேயே மறைந்தன.

அதன்பிறகு ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு 1947-இல் புகழ்பெற்ற எழுத்தாளரும் இலக்கியவாதியுமான பி.எஸ். ராமையா இயக்கத்தில் வெளிவந்த "தன அமராவதி" என்ற படத்துக்கு கே.வி. மகாதேவன் இசை அமைத்தார்.

பாடகர் வி.என். சுந்தரம் கதாநாயகனாக நடித்த இந்தப் படத்தில் தான் ஜே.பி. சந்திரபாபு ஒரு சிறுவேடத்தில் அறிமுகமானார்.

கே.வி. மகாதேவனின் ஆரம்பகால இசையில் வெளிவந்த பாடல்கள் ஒன்றைக்கூட நம்மால் கேட்க முடியவில்லை.

ஒரு இசை அமைப்பாளரின் வெற்றி என்பது அவரது பாடல்கள் மக்களால் முணுமுணுக்கப் படவேண்டும். அவர்களது உதடுகளில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும். அதற்கு படம் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

அந்த ரீதியில் தன் இசை அமைப்பில் வெளியான படங்கள் அப்படி ஒன்றும் பெரு வெற்றி பெற்ற படங்களாக அமைந்து விடவில்லை. ஆகவே படவாய்ப்புகளை மட்டும் நம்பிக்கொண்டிருக்க முடியாது. வேறு ஏதாவது செய்தாகவேண்டும் என்று தோன்றியது அவருக்கு.

பக்திப் பாடல்களை இசைத்தட்டுக்களாக வெளியிட்டுக்கொண்டிருந்த எச்.எம்.வி. நிறுவனத்தில் சேர்ந்தார்.



எச்.எம்.வி. யில் மகாதேவனின் இசையில் பக்திப் பாடல்கள் வெளிவர ஆரம்பித்தன.

அந்தச் சமயத்தில் முன்னுக்கு வரத் துடித்துக்கொண்டிருந்த ஒரு இளம் பாடகர் எச்.எம்.வி.க்கு வந்து கே.வி. மகாதேவனைச் சந்தித்தார்.

மாடர்ன் தியேட்டர்ஸில் சில படங்களுக்கு அவர் பாடிக்கொண்டிருந்தார். ஆனால் புகழ் பெற்ற ஏ.எம். ராஜா, கண்டசாலா ஆகியோரின் வருகை அரிதாக கிடைத்த பாடல் வாய்ப்புகளையும் பறித்துக் கொண்டுவிட, வாய்ப்புகள் தேடி கம்பெனி கம்பெனியாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தவரின் கையில் இருந்த பணமெல்லாம் கரைந்துவிட்ட சூழ்நிலையில் எச்.எம்.வி. நிறுவனத்துக்கு வந்து கே.வி. மகாதேவனைச் சந்தித்தார்.

அவரை இரண்டு பக்திப் பாடல்கள் பாடவைத்து எண்பது ரூபாய் வாங்கிக்கொடுத்தார் கே.வி. மகாதேவன். அந்தப் பாடகர் அப்போதிருந்த நிலையில் அது என்பதாயிரத்துக்கு சமம்.

"நீங்க ஏ.வி.எம். ஸ்டுடியோவுக்கு போய்ப் பாருங்க. கண்டிப்பா உங்களுக்கு சான்ஸ் கிடைக்கும்." என்று அவருக்கு புது நம்பிக்கையையும் கொடுத்து அவரை அனுப்பி வைத்தார். ஏ.வி. மெய்யப்ப செட்டியாரையும், இசை அமைப்பாளர் சுதர்சனத்தையும் சென்று பார்த்த அந்தப் பாடகருக்கு மகாதேவன் சொன்னது போலவே இரண்டு பாடல்களைப் பாட வாய்ப்பு கிடைத்துவிட்டது.


அந்தப் பாடகர் மெல்ல வளர்ந்து விஸ்வரூபமெடுத்து அறுபதுகள் முழுக்க திரை இசையை தன்வசப் படுத்திக்கொள்ள அன்று கே.வி. மகாதேவன் காட்டிய வழி அஸ்திவாரமிட்டது.

டி.எம். சௌந்தரராஜன் தான் அந்தப் பாடகர்.

(தொடரும்)

# ஒரு பசுமைப்புரட்சிக்கு

இலங்கைக்கு தென்மேல் வடகீழ் பருவக் காற்று மூலம் மழை கிடைக்கிறது இந்த நீரைத் தேக்கி, நீர் மின்சாரம் மற்றும் குளங்களில் தேக்கி வைத்து விவசாயத்திற்கு நீரைப் பயன்படுத்துவதும் நாம் அறிந்த விடயமாகும்.




இப்படியிருந்தும் ஆண்டு தோறும் பெருமளவு நீர் கடலுக்குள் செல்கின்றது. எமது நாட்டில், மகாவலி ஆற்றுநீர், களனி கங்கை நீர், நிலவளகங்கை நீர், தெதுரு ஓயா போன்ற பல ஆறுகளின் நீரும் கடலுக்குள் செல்கின்றது. இதற்கு முக்கிய காரணம் நீரை சேமித்து வைக்கக்கூடிய பொறிமுறைகள் இல்லாததே ஆகும்.

ஆற்று நீரை கடலுக்கு செல்லாது சேமிப்பதாயின் எமக்கு ஒரு பாரிய கிடங்கு ஒன்று தேவைப்படும் இவ்வாறான ஒரு பாரிய கிடங்கை நாம் தேடிக் கொள்ளலாம்.

யாழ்.குடாநாட்டிற்கும் வன்னி பெருநிலப்பரப்பிற்கும் இடையில் கடல் நீரால் நிரம்பிய ஒரு பாரிய பிரதேசம் காணப்படுகிறது. இது கிளாலிக்

# தின்னச் தின்ன...



சமீபத்தில் புகழ்பெற்ற "BARBECUE" (பார்பிக்யு), "தந்தூரி" எனப்படும் அதிக சூட்டினால் நேரடியாக நெருப்பில் சுட்ட அசைவ மற்றும் சைவ உணவுகள் பிரபலம் ஆகி வருகின்றன. இதுபோன்ற உணவுவகைகள் உடலில் உள்ள DNA - வித்தினை சல்லடையாக்கி புற்றுநோயை வரவழைக்கும். நேரடியாக தீயினால் சுடப்படும் உணவுகளில் கார்பன் படிந்து, நீண்டவில் பல நோய்களை வரவழைப்பதில் வல்லவன் என்பதைப் பலர் அறிய மாட்டார்கள். இந்த உணவுவகைகளின் மேல் பூசப்படும் சிவப்புச் சாயம் உடலுக்கு கேடு விளைவிக்க கூடியது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மெழுகு தடவிய அப்பிள்களை வெளிநாடுகளில் விற்க முடியாது. அதனால்தான் அந்த நாடுகள் முன்னேற்றத்தை அடைந்து உள்ளது. இங்கோ பசை தடவிய அப்பிள்கள், பழங்கள், இரசாயனங்களால் பழுக்க வைக்கப்படும் பழங்கள் சுலபமாக விற்கப்படுகின்றன.

பெரும்பாலும் நமக்கு இரசாயனங்களால் பழுக்கவைக்கப்படும் மாம்பழம் வாழைப்பழம் தெரியும். ஆனால் பப்பாசிப் பழங்களும் கல்சியம் கார்பைட் கொண்டு பழுக்க வைக்கப்படுகின்றன. கார்பைட்டில் ஆர்சினிக் மற்றும் பொஸ்பரஸ் உள்ளன. இவை உடலை கெடுக்கும் இரசாயனப் பொருட்களாகும். இவை தோல், கிட்னி, இதயம், ஈரல் ஆகியவற்றை கெடுத்து அல்சரையும் வாயுத்தொல்லையையும் உண்டாக்கும்.

உருளைக்கிழங்கிற்குப் பக்கத்தில் அப்பிளை வைக்கக் கூடாது-ஏன் தெரியுமா? அப்பிள் எத்திலின் வாயுவை வெளியிடுகிறது. இந்த வாயு உருளைக்கிழங்கின் சுவையைக் கெடுத்துவிடும். மேலும் அதிக நாட்கள் வரை கெட்டுப் போகாமல் இருக்கும் தன்மையையும் உருளைக்கிழங்கு அந்த வாயுவினால் இழந்து விடுகிறது. அதுமட்டுமல்ல, உருளைக்கிழங்கின் பக்கத்தில் அப்பிளை வைத்தால் அப்பிளின் சுவையும் தன்மையும் கெட்டுப் போகும்.

பச்சைத் தேயிலைத் தேநீர் குடித்தால் நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும். அதுமட்டுமல்ல, ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள் பச்சைத் தேயிலை மூளையில் முதுமை ஏற்படுவதைக் குறைக்கிறதென்று கண்டறிந்துள்ளனர். பச்சைத் தேநீர் அருந்துவோரிடம் வயோதிப நிலையில் மூளைத்திறன் குறைவது குறைவாக உள்ளதாம்.

இனிப்புகளையும், எண்ணெய் பலகாரங்களையும் காலையில் அல்லது முற்பகலில் மட்டும் சாப்பிட வேண்டும். அவற்றால் விளையும் கலோரிகள் நாள் முழுவதும் உடல் இயக்கங்களால் எரிந்து சக்தியாக வெளியேறி விடும். மாலையிலோ, இரவிலோ சாப்பிட்டால் தூங்கும்போது ஜீரணமாவதால் வெறும் கொழுப்புச் சத்து மட்டுமே உடலில் சேரும் என்று உணவு ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வாழைப்பழத்திற்கு மருத்துவ குணம் உண்டு. அதன் தோலுக்கும் முக்கிய மருத்துவ குணமுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சிறுநீரகக் கல் நோயைக் குணப்படுத்தும் தன்மை வாழைப்பழத் தோலுக்கும், பசலைக்கீரைக்கும் உண்டு என்று அவர்கள் கூறுகின்றனர்.

சிறுநீரகப் பையில் கல் உருவாகாமல் இருக்க மாம்பழங்களைச் சாப்பிடுவது நல்லது என சித்த மருத்துவர்கள் கூறுகிறார்கள். கல் உருவாகி இருந்தால் அதற்கு மாம்பழச்சாறு குடித்து வந்தால் கல் கரைந்துகொண்டே வரும். கல் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மாம்பழம் நரம்புத்தளர்ச்சி நோயைப் போக்கும். கண்பார்வை தெளிவாகும்.

பித்தக் கோளாறுகள் உள்ள உடம்புடையவர்கள் தினமும் திராட்சைப் பழங்களைச் சாப்பிட்டு வந்தால் கை, கால் எரிச்சல், தலை சுற்றல் ஆகியவை அகலும்.

---

# ...க்கு வித்திடுவோம்

– கே.ஆனந்தராஜா –

...என்று அழைக்கப்படுகிறது. இக்கடலுக்கு பூநகரிப் பகுதியிலிருந்து கடல் நீர் உள்ளே வருகின்றது. இவ்வாறு கடல் நீர் உள்வருவதை தடுத்து நிறுத்த வேண்டும். கதவுகளுடன் கூடிய அணைக்கட்டுக்களை அமைக்க வேண்டும். இதன் மூல மாக கடல் நீர் கிளாலிக் கடலுடன் சேர்வதைத் தடுக்கலாம்.

இவ்வாறு தடுத்து நிறுத்திய பின்னர் கிளாலிக் கடலிலுள்ள கடல் நீரை கடலுக்குள் வெளியேற்ற வேண்டும். நீரை வெளியேற்றுவதற்கு நீர் இறைக்கும் இயந்திர சாதனங்களை பயன்படுத்த வேண்டும் அத்துடன் கோடைக்காலமாயின் சூரிய வெப்பம் மற்றும் வீசும் காற்று மூலமாகவும் நீரை வற்றச் செய்யலாம்.

கிளாலிக் கடல் நீர் முற்றாக வெளியேற்றப்பட்டதும் தரையில் உள்ள மண்ணை அகற்றுவதன் மூலம் ஆழத்தை மேலும் அதிகரிக்கலாம். நம் நாட்டில் ஏராளமான ஆற்று நீர் கடலுக்குள் செல்கின்றது.

முதலில் உயரமான இடத்தினைத் தெரிவு செய்ய வேண்டும் ஆற்றுக்கு குறுக் காக அணைக-ளைக் கட்ட வேண்டும். இங்கிருந்து குழாய்கள் மூலமாக-வோ அல்லது வாய்க்கால்களை அமைத்து கிளாலிக் கடல் இருந்த பிரதேசத்தை ஆற்றுநீரால் நிரப்ப வேண்டும். அத்திட்டத்தின் மூலம் பாரிய அளவு ஆற்று நீரை சேமிக்க முடியும்.

இந்த நீரை சேமிக்கும் திட்டத்தினை குளத்திற்கு ஒப்பிட முடியாது. குளத்து நீரினை நீர்ப்பாசனத்திற்காக திறந்து விட முடியும் ஆனால் இங்கு. நீரை வெளியே எடுக்க வேண்டுமாயின் நீர் இறைக்கும் இயந்திர சாதனங்களையோ அல்லது காற்றாலைகளைப் பயன்படுத்த வேண்டும்.

கிளாலிக் கிடல் நன்னீரால் நிரப்பப்பட்டதும் அதன் இருமருங்கிலும் 500 மீற்றர் தூரத்திற்கு காட்டு மரங்களை நாட்ட வேண்டும். சுண்டிக்குளம் முதல் பூநகரி வரை காட்டு மரங்கள் நடப்பட வேண்டும். முதிரை, பாலை, நாவல், வேம்பு, மலைவேம்பு, காட்டுத்தேக்கு, சவுக்கு போன்ற மரங்களை அமைப்பதற்கு ஏற்றவை.

## நன்மைகள்

கிளாலி நன்னீர்த் தேக்கத்தின் இரு பக்கங்களிலும் நிலத்தடி நீரின் அளவு அதிகரிக்கும். இதனால் இரு மருங்கிலும் உள்ள கிணறுகளின் நீர் மட்டமும் அதிகரிக்கும். வன்னியில் உள்ள குளங்களுக்கு இந்த நீரைப் பாய்ச்சலாம். யாழ்.குடாநாட்டில் உள்ள குளங்களுக்கு இந்த நீரை குழாய்கள் மூலம் செலுத்தலாம்.

இதன்மூலம் குடா நாட்டுக் குளங்களில் நீர் மட்டம் குறை யாதிருப்பின் இங்கும் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க முடியும். அல்லது மரக்கறி பயிர்ச் செய்கையை ஊக்கு விக்க முடியும்.

நன்னீர் மீன்களை வளர்த்து, மீன்பிடியை ஊக்குவிக்கலாம், பழ மரங்களை நாட்டுவதன் மூலம் நாட்டின் பழத் தேவையை பூர்த்தி செய்யலாம்.

பெரிய காட்டு மரங்களை வளர்ப்பதன் மூலம், சூழல் வெப்பநிலையைக் குறைக்கலாம், மழை வீழ்ச்சியும் கிடைக்கும்.

பருவகால மழை கிடைக்காத சந்தர்ப்பத்தில், வறட்சியால் பாதிக்கப்படும் பிரதேசங்களுக்கு இங்கிருந்து நீரை வழங்க முடியும்.

தொண்டைமானாறு ஆற்றுக்கும் இந்த நீரை வழங்க முடியும் குடாநாட்டின் வேறு இடங்களுக்கும் இந்த நீரை வழங்கமுடியும்.

இத்திட்டத்தின் மூலம் யாழ். குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிக்கு தேவையான குடி நீரை வழங்க முடியும்.

மேற்குறிப்பிட்ட திட்டத்தினை வடமாகாணசபை அல்லது

---

# "நேரந்தின்னிகள்;" (TIME EROSIONS)

இன்றைய அவசரயுகத்திற்கு ஈடு கொடுத்து, தமது அன்றாட அலுவல்களைப் பூர்த்தி செய்ய அவகாசம் போதாமற் பலர் தவிக்கின்றனர்.

மனிதனின் உடல் உழைப்பினைப் பெருமளவிற்கு தொழில்நுட்ப இயந்திராதிகள் தற்போது சுவீகரித்துக் கொண்டுள்ள போதிலும் - அவற்றை "இயக்குவதற்கும்" (Operate) "திருத்துவதற்கும்" (Repair) "புதுப்பிப்பதற்கும்" (Renewal) மனிதவலு தேவைப்படுகிறது. இன்னும் - யப்பான் போன்ற அறிவியல் ஆற்றலில் முன்னிலை வகிக்கின்ற நாடுகளில் "எந்திர மனிதர்கள்" (ROBOTS) உலோக உருக்காலைகள் உள்ளிட்ட "அபாயகரமான" (Risky) உற்பத்தி மையங்களில் தொழிற்படுகின்றனர். இவற்றை எல்லாம் நிர்வகிப்பதற்கு மனிதனுடன் கூடவே நேரமும் பங்காற்றிக் கொண்டிருக்கிறது. இந்தளவில் நேரம் என்பது உழைக்கும் மனிதர்க்கு உன்னதமாகவே உபயோகப்படுகின்றது.

இதே வேளையில், இங்கோ - "போகாத பொழுதினைப் போக்கடிப்பதற்கு" என சனரஞ்சக சாதனங்கள் வகை தொகையாகப் பெருகியுள்ளன. இவற்றின் அதீத - பரவலான பாவனைகள் தவிர்க்க முடியாததாகியும் விட்டன. வானொலியின் ஆதிக்கம் வலுக்குறைந்து போய், அந்த இடத்தை - தொலைக்காட்சி மற்றும் இணைய வலைத்தள அம்சங்கள் ஆக்கிரமித்துள்ளன. இத்தகைய - நவீன தகவற் தொடர்பாடல் ஊடகங்களினூடாக, துரிதமான - துல்லியமான பயன்மிகு பெறுபேறுகள் பலதையும் அடைந்து கொள்ள முடியும். ஆயினும் அநேகமாக - அநியாயமாக அவை பொருட்படுத்தப்படுவதில்லை. மனித இரசனைக்குத் தீனி போடும் ரகத்திலான - எதார்த்தங்களை மீறிய, மிகைப்படுத்தப்படும் வெளிப்படுத்தல்களே பெருவரவேற்பினைப் பெற்று வருகின்றன. பொன்னான பொழுதுகளை இவை சிறுகச்சிறுக அரித்துத் தின்று தீர்த்தும் விடுகின்றன.

இந்த "நேரந்தின்னிகளில்" இப்போது முதலிடம் பிடித்திருப்பது தொலைக்காட்சியேதான்! ஒவ்வொரு வீட்டிலும் "அத்தியாவசியப் பண்டம்" போல நடுநாயகமாக இது கொலுவிருக்கும். இதன் முன்னே முழுக்குடும்பமும் வாய் பிளந்து வீற்றிருக்கும்; தொலைந்து போகாத - இழுத்தடிப்பு நாடகத் தொடர்களுக்காக கண்ணுறங்காமல் காத்திருக்கும்; அடுப்பில் வைத்த ஆகாரம் அப்படியே தீய்ந்துவிடும்; இடுப்புக்குழந்தை பாலுக்கழுது களைத்தே ஓய்ந்து விடும்.

இவ்விடத்தில் - அண்மையில் பார்க்கக் கிடைத்த "முகநூல்" (facebook) பக்கமொன்று நினைவிற்கு வருகிறது.

ஒரு குழந்தைக்கு வளைக்கரமொன்று புட்டிப்பால் புகட்டுகிறது. அதுவும் எப்படி.....? சூப்பி முனையைக் குழந்தையின் மூக்குத்துவாரத்தினுட் புகுத்தி.....!

"ஐயையோ!... யாராவது அந்த ரிவியை நிறுத்தித் தொலையுங்களேன்!..." என்று அந்தக் குழந்தை அலறுவதாக வடிவமைக்கப்பட்ட இக்காட்சிப் பதிவேற்றம், மெய்யாகவே முகநூல் முத்துக்களில் ஒன்று!



ரவி(சூரியன்) எதும் தூயசக்தியைத் துதிப்பவர், நேரத்தைப் பொன்னென தமக்கு எடுத்து நடப்பர்;


ரிவி எனும் மாய சகதிக்குள் குதித்திருப்பவர் இந் நேரத்தினைத் தின்னவென அதற்குக் கொடுத்துக் கிடப்பர்!...

இந்த "நேரந்தின்னி" ஆளுமைக்கு அடிமையானவர்களுக்கு வீட்டு முற்றத்தில் - பராமரிப்பற்று, "தேவ அபிமானி"யாம் கொடிமல்லிகை படராமல் வாடிச்சாகும்!

இவர் தம் அரும்பொழுதோ- நடிகை தேவயானியின் "கொடிமுல்லை" தொடரைத் தேடியே போகும்!!

– இடைக்காடு இளையபண்டிதன் –

# நிகழ்வுகளின் பதிவுகள்....

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் மானம்பூ திருவிழாவன்று இடம் பெற்ற வாழைவெட்டு நிகழ்வைக் காணலாம். (இ)






தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் சாரணிய மாணவர்களின் சின்னஞ் சூட்டும் நிகழ்வுஅண்மையில் கல்லூரியில் நடைபெற்றபோது... (63)






யாழ். புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தில் நவராத்திரி விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி மற்றும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ச.லலீசன்ஆகியோர் மாணவர்களுக்கு பரிசளிப்பதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் காணலாம்.

யாழ். புகையிரத நிலையத்தின் புனரமைப்புப் பணிகளை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி நேரில் சென்று பார்வையிடுவதைக் காணலாம்.




அத்தியடி கலைமகள் சனசமூக நிலையத்தின் நவராத்திரி விழா அண்மையில் நடைபெற்றது. இதில் நல்லூர் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் அ.இரவீந்திரதாஸன் மாணவிக்கு பரிசில் வழங்குவதைக்காணலாம்.



காரைநகர் தங்கோடை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் விஜயதசமியன்று நடைபெற்ற மானம்பூ திருவிழா (50)

# மக்களுக்கு நட்பு ரீதியில் சேவையினை வழங்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியில் நட்பு ரீதியாக சிறந்த சேவையினை வழங்குங்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக் களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் 28 கிராம அலுவலர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்கி வைத்து உரையாற்றும் போது தெரிவிதத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த கிராம அலுவலர் வெற்றிடங்கள் பெருமளவுக்கு நிரப்பப்பட்டு விட்டன. இன்னும் 19 வெற்றிடங்கள் காணப்படுகின்றன அவற்றில் 10 வெற்றிடங்களுக்கான நியமனங்கள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளன. எஞ்சி இருக்கின்ற 09 வெற்றிடங்களும் ஏற்கனவே நடாத்தப்பட்ட பரீட்சை பெறுபேற்று புள்ளிகளின் அடிப்படையில் அந்தந்த பிரதேசங்களில் இருந்தே தெரிவுசெய்யப்பட்டு நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்எனத்தெரிவித்த அவர், இந்த மாவட்டத்தில் முதல் முறையாக இவ்வாறான ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது அந்தந்த பிரதேசங்களில் இருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். என்றார்.

கடந்த காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் காணப்படவில்லை. எங்கள் பிரதேசங்களின் வெற்றிடங்கள் எங்கள் பிரதேசங்களுக்கு வெளியால் உள்ளவர்களாலேயே நிரப்பப்பட்டு வந்தன. அதனை மாற்றியுள்ளோம். எனவே அந்தந்த பிரதேசங்களில் இருந்து புதிதாக கிராம அலுவலர்களாக நியமனம் பெறுகின்றவர்கள் அந்த மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க வேண்டும். என்றார்.

இந் நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பிரதி செயலாளர் தவராஜா, பிரதித் திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன்,பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி,கண்டாவளை பிரதேச செயலாளர் முகுந்தன், பச்சிலைப் பள்ளி பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் "ஹஜ்" தொழுகை சிறப்பு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு

ஹஜ் பொருநாளை முன்னிட்டு எழு பள்ளிவசல்கள் ஒன்றிணைந்து இன்று காலை 6.30 மணிக்கு யாழ். ஜின்னா மைதானத்தில் ஹஜ் பெருநாள் ஜூம்மா பிரசங்கமும் தொழுகையும் இடம் பெறவுள்ளதாக உலமா சபைத் தலைவர் ஏ.எம்.எ.அஸீஸ் மௌலவி தலைமையில் நடைபெற்ற பள்ளிநிர்வாகிகளின் கூட்டத்தில் பெண்களுக்கு மஸ்ஜித் முஹம்மதியுபுதுப் பள்ளியில் பெருநாள் ஜூம்மா தொழுகை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருநாள்தினம் மாலை 4 மணியிலிருந்து இரவு பத்து மணிவரை மதுரஸாமாணவர்களின் இஸ்லாமிய சன்மார்க்கப்போட்டியில் வெற்றியீட்டியவர்களின் நிகழ்சியும் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளன.



யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் இந்நிகழ்சியை ஒழுங்கு செய்துள்ளது. உலமாக்கள் ஹஜ்ஜுப் பெருநாள், உள்ஹிய்யா அமல்களின் சிறப்பு பற்றிய விசேட உரையாற்றவுள்ளார்.

இன்றைய பெருநாள் தொழுகையின் பின்னர் தொடர்ந்து மூன்று தினங்கள் உள்ஹிய்யா குர்பான் கடமை நிறைவேற்றப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. (105)

# 20 பேருடன் நடந்தேறிய கூட்டத்தை இரத்துசெய்க

## உதவி ஆணையாளருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

சுமார் 250 குடும்பங்கள் வாழும் கிராமத்தில் 20 பேருக்கும் குறைவானவர்களுடன் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தை ஊர் மக்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளவில்லை

இவ்வாறு சுதுமலை நாமகள் சனசமூக நிலைய மக்கள் 47 பேர் கையெழுத்திட்ட கடிதத்தை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கையளித்துள்ளனர்.

சுதுமலை நாமகள் சனசமூக நிலையத்தின் முறையற்ற நிர்வாகத் தெரிவு எனும் தலைப்பில் எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட நாமகள் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் பிரதேச சபைத் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பான அறிவித்தல் கூட்டத்திற்கு 4 தினங்களுக்கு முன்னரே கிராமத்தில் ஒட்டப்பட்டிருந்தது.

புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பாக போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை.

கூட்டத்திற்கு ஊர்மக்கள் சென்ற போதும் அங்கத்துவ பணம் 100 ரூபா செலுத்தியவர்கள் மட்டுமே கூட்டத்தில் பங்கு பற்ற முடியும் என அங்கு வந்திருந்த அரச அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 250 குடும்பங்கள் வாழும் கிராமத்தில் 20 பேருக்கு குறைவான மக்களுடன் இடம் பெற்ற கூட்டத்தை இரத்துச் செய்யுமாறு கோரியே நாமகள் சனசமூக நிலைய மக்கள் கையெழுத்திட்ட கடிதத்தை சமர்ப்பித்துள்ளனர்.




## பட்டதாரி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு

தென் மாகாணப் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆசிரிய சேவை பிரமாணங்களுக்கேற்ப இலங்கை ஆசிரியர் சேவை 3 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்துக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக இலங்கை பட்டதாரிகளிடமிருந்து தென் மாகாணக் கல்வியமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், வரலாறு, குடியுரிமைக் கல்வி மற்றும் புவியியல், வர்த்தகமும் கணக்கீடும், விவசாயம், சித்திரம், நடனம், சங்கீதம், தகவல் தொழில்நுட்பம், அரசியல் விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும் போன்ற 14 பாட வகைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்லாது பிற மாகாணங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15.10.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படியாக செயலாளர், தென் மாகாணக் கல்வி அமைச்சு, தக்சினபாய, லபுதுவ, அக்மீமன என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்தை வைத்து அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் 'தென் மாகாணப் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் 2014' எனக் குறிப்பிடுதல் வேண்டும். இதன் மேலதிக விபரங்களை கடந்த 01.10.2014 ஆம் திகதி வெளிவந்த தினகரன் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

## கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

### (நிதி திட்டமிடல் அமைச்சு)

நிதி திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

உதவிப் பணிப்பாளர் (பயிர்க்காப்புறுதி), உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்), உதவிப் பணிப்பாளர் (மாவட்ட அலுவலகம்), திட்டமிடல் உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் (வெளிக்கள உத்தியோகத்தர்), முகாமைத்துவ உதவியாளர் (சிங்களம் அல்லது தமிழ்), முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்), முகாமைத்துவ உதவியாளர் (வரவேற்பு, தொலைபேசி இயக்குநர்), சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கே விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி பதவி நிலைகளுக்கு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் முதல் பட்டதாரிகள் வரை விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15.10.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படியாக தவிசாளர், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை, இல.117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்தை வைத்து அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். இதன் மேலதிக விபரங்களை கடந்த 30.09.2014 ஆம் திகதி வெளிவந்த தினகரன் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

## கணக்காளர் - தரம் II

### (விவசாய அமைச்சு)

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் கணக்காளர் தரம் II பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக விவசாய அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

வெளிவாரி விண்ணப்பதாரிகள் - முகாமைத்துவ அல்லது வணிகத் துறையில் உயர் தேசிய டிப்ளோமா அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் (ICASL) இடைநிலை (Intermediate Level) தகைமை அல்லது முகாமைத்துவ கணக்காளர் பட்டய நிறுவனத்தின் (CIMA) இடைநிலை (Intermediate Level) தகைமை அல்லது உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் பெருநிறுவன கணக்காளர் சங்கத்தின் (ACCA) இடை நிலை (Intermediate Level) தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது மதிப்பு வாய்ந்த வர்த்தகத் தாபனம் ஒன்றில் கணக்கியல் மற்றும் நிதித் துறையில் குறைந்த பட்சம் தேர்வின் பின்னரான மூன்று வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி ஒரு சேர்க்கப்பட்ட தகுதியாகும்.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம், 114, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்தை வைத்து அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். இதன் மேலதிக விபரங்களை கடந்த 28.09.2014 ஆம் திகதி வெளிவந்த தினகரன் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

தொகுப்பு:- சி.என்.எச். சாலீஸ்

# ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பை வெளியீடு செய்ய தாமதம் வேண்டாம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிய இலங்கை ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பை உடனடியாக வெளியிட அரசு முன்வர வேண்டுமென இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ்விடயம் குறித்து சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஆசிரியர் தினம் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையில் இன்று 6 ஆம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது ஆசிரியர் தினத்தைக் கொண்டா டும் அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எமது சங்கம் வாழ்த்துக்களைத் தெரி வித்துக்கொள்கிறது.

2006.04.25 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கைக்கமைய ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு புதிதாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.

2008.09.10. ஆம் திகதிய உயர்நீதிமன்ற தீர்ப்பும் இதனை வலியுறுத்தியுள்ளது.

இதற்கமைய தயாரிக்கப்பட்ட புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு 2008.07.01 முதல் அமுலுக்கு வரும் எனவும் 2011.01.01 முதல் அதற்கான நிலுவைகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இது வரை அது வெளியிடப்படவில்லை.

இக்குறிப்பை வெளியிட்டு அமுல்படுத்தப்படாமையினால் 2012.06.01 கணிப்பீட்டின்படி சேவையிலுள்ள 2 12 321 ஆசிரியர் அதிபர்களுக்கு 672 கோடிக்கும் அதிகமான தொகை இழப்பு ஏற்படுகின்றது. இதே வேளை 2010.12.31 வரையே பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதால் 2011.01.01 முதல் பதவி உயர்வுகள் எதுவு மின்றி பாதிக்கப்பட்ட அதிபர் ஆசிரியர்களும் உள்ளனர்.

எனவே இனியும் இழுத்தடிக்காமல் உலக ஆசிரியர் தினத்தில் இதனை வெளியிட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (10)

# இலங்கையிலிருந்து சென்றவர்கள் படகை கைவிட்டு தப்பியோட்டம்

## தமிழ்நாடு தங்கச்சி மடத்தில் சம்பவம்




இலங்கையிலிருந்து கண்ணாடி இழைப்படகில் சென்றவர்கள் தமிழ்நாடு தங்கச்சிமடம் கடற்கரைப்பகுதியில் படகை கைவிட்டுச் சென்ற நிலையில் அதனைத் தமிழகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இயூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து குறித்த பகுதிக்கு சென்ற அவர்கள் கைவிடப்பட்ட நிலையிலிருந்த படகு மற்றும் இயந்திரத்தை கைப்பற்றியுள்ளனர்.

படகில் வந்தவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# வருக வருக பெருநாளே....



துல்ஹஜ் மாதம்
பத்தாம் நாள்
துலங்கியே நிற்கும்
தியாகத் திருநாளே
நின்வரவு நல்வரவாக
வரவேற்கின்றோம் நாம்!

ஒருமையின் சின்னமாய்
அருமையின் பெருமையாய்
மாநபிமாண்பதாய்
மலர்ந்தாயோ நீ!


தியாகங்கள் பலதை
தீர்க்கதரிசனமாய் தீட்டி
திடசங்கற்பம் கொண்டே
திருத்தம் தர வந்தாயோ நீ!

இதயங்களுக்கு இன்னிசையாய்
இணையில்லா இகபரமாய்
ஈடிணையற்ற இன்பமாய்
இலங்குவோம் நந்நாளில்!

என்றும் எம்மவர் இதயமதில்
இப்ராஹிம் நபி இதிகாஷம்
ஹாஜர் நாயகி தியாகமும்
இஸ்மாயில் நபி கருணையும்
எடுத்துக் காட்டதன் எழுச்சியே!

வருக வருக பெருநாளே
தருக தருக வளவாழ்வே
பெருக பெருக பேரின்பமே
வளர்வோம் உயர்வோம் மாண் பதிலே!

அப்ரார் அப்துல் அஸீஸ்
யாழ்ப்பாணம்



# பரமர் சங்கமம்

நாய்க்குத் தெரியுமா போர்த் தேங்காய்? எண்டால் என்ன அர்த்தம்; இன்னொரு பழமொழியைத்தான் துணைக்கு அழைக்க வேண்டிக் கிடக்கு. அது 'மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட மாதிரி எண்டது தான்.

நாய்க்கும் போர்த்தேங்காய்க்கும் என்ன தொடர்பு, விளங்கேல்லை எண்டாலும் அது ஒரு குறியீட்டைத் தொக்கி நிற்கிறது. எத்தனையோ பழமொழிகள் இக்காலத்துக்கு மாறுபட்டுப் போனாலும் பலநூறு சொற்களில் விளக்க எடுக்கும் பிரயத்தனத்தை இரண்டே வரிப் பழமொழி பசுமரத்தாணி போன்று நன்றாக சென்று தைத்து விடுவதையும் மறுக்க முடியாது.

பிரச்சினை என்னெண்டால் ஞாயிற்றுக்கிழமைகளில் தென்றல் பண்பலையில் உல்லாசவேளை என்றொரு ஒருமணி நேர நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வருகிறது பாடல், உரையாடல் இப்படிப் பல்வேறு அம்சங்கள் அலங்கரிக்கின்றன. செப்ரெம்பர் மாதமொரு நிகழ்ச்சியில் நேரம் பொன்னானது எனக் கூறிய அறிவிப்பாளர் உங்கள் வாழ்க்கையில் பொன்னான நேரத்தை ஏதாவது காரணங்களால் தவறவிட்டதுண்டா?

அதனை எங்களுடன் தொடர்பெடுத்துத் தெரிவியுங்கள் என்று தொலைபேசி இலக்கங்களையும் கூறி இருந்தார். அந்நிகழ்ச்சி எண்டில்லை தினமும் கூட 'சக்தி, சூரியன் பண்பலைகளில் இப்படி ஏதாவது விசயங்களை வைத்து நேயர்களுடன் அறிப்பாளர் உரையாற்றுவார்.


அந்நிகழ்ச்சியில் தொடர்பு கொண்ட யுவதி ஒருவர் தமக்கையும் தானும் பாடசாலை செல்ல முன்பாக சிற்றுண்டி வகைகளைச் செய்து போட்டுப் போவது வழக்கம் ஒரு நாள் மூத்த சகோதரி எழுப்பி விட சேர்ந்து சகலதையும் முடித்து விட்டபோதும் பொழுது புலராததைக் கண்டு நேரகாலம் தெரியாமல் எழுந்து செய்த காரியங்களை நெடுநேரம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அதனை தன் வழிக்கு நெறிப்படுத்த அவ்வறிவிப்பாளர் பட்டபாடு அதுபோலத்தான் சூரியன் பண்பலையில் ஒலிபரப்பாகும் அலட்டல் இல்லாத கலக்கல் தென்னிந்திய சினிமாக் கலைஞர்களுடனான நேர்காணலில் குரும்பூர் குப்புசாமியின் மனைவியிடம் உங்களுக்குப் பிடித்த நிறமெனக் கேட்டார் அதற்குப் பாடகி கறுப்பு எனக் கூறிவிட்டு தடம்புரண்டு ஆண்கள் கறுப்பாக இருந்தாலே கற்சிதமாக இருப்பார்களெண்டு இறுக்கத் தொடங்கிவிட்டார்.

குறிக்கிட்ட நேர்காணலைச் செய்த அஷ்ரப் நான் அதைக் கேட்கவில்லை உங்களுக்குப் பிடிச்ச நிறத்தைத்தான் கேட்டனெண்டாரே பாடகிக்குத்திக்கொண்டிருக்கும். இப்புடித்தான் சிலரிடம் கேட்ட கேள்வியை விளங்காமல் ஏதேதோவெல்லாம் அலம்புவதைத் தினமும் நிகழ்ச்சிகளில் எண்டில்லாமல் நேரிலும் அனுபவிச்சிருப்பியள் .

இப்புடியான ஒண்டை விளக்கிச் செய்வதெண்டால் 'நாய்க்குத் தெரியுமா போர்த்தேங்காய்" எண்ட பழமொழி நச்செண்டு உணர்த்துதெல்லே.. என்ன நான் சொல்லுறே..

# சிறுவர்களை மகிழ்வூட்டும் நிகழ்வு மொபிடெல் தரும் செயற்திட்டம்





மொபிடெல் நிறுவனம் கிளிநொச்சியில் அமைந் துள்ள சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 350 சிறுவர்களுடன் உணவு மற்றும் அன்பளிப்புகள் பரிமாறி மகிழ்ச்சிகரமான உலக சிறுவர்கள் தினத்தை. கொண்டாடியுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள சிறுவர் இல்லமான மஹாதேவ ஆச்சிரமத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு மொபிடெல் நிறுவனம் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் கட்டடத்தில் அமைந்துள்ள திரையரங்கில் Frozen எனும் 3D திரைப்படத்தினை பார்த்து மகிழ்வதற்கான வாய்ப்பை வழங்கியது. மேலும் மதிய உணவினைத் தொடர்ந்து மாணவர்கள், சிறுவர் பூங்கா பகுதிக்கு அழைத்துச் சென்று, களியாட்டத்தை வழங்கும் Bouncy castles மற்றும் merry go round போன்ற விளையாட்டுக்களையும் சிறுவர்களுக்கான போட்டி நிகழ்வுகளையும் நடாத்தியது. அத்துடன் இந்த நாளை சிறுவர்கள் என்றும் மறக்காமல் இருக்கும் வகையில் அவர்களுக்கு புகைப்படம் எடுத்துக் கொள்வ தற்கான வாய்ப்பும் வழங்க ப்பட்டது.

மொபிடெல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஞ்சித் ஜி.ரூபசிங்ஹ கருத்து தெரிவிக்கையில்,

இந்த விசேட நிகழ்வை முன்னெடுப்பதையிட்டு மொபிடெல் அணியினர் மிகவும் மகிழ்ச்சியடைவதோடு மகாதேவ ஆச்சிரமத்தை சேர்ந்த சிறுவர்களுக்கு நாம் எம்மாலான மகிழ்வூட்டும் அனுபவத்தை வழங்கியுள்ளோம் எமது தேசத்தின் சிறுவர்களின் நலனுக்கு பங்களிப்பு வழங்குவதில் எமக்கும் பொறுப்பு காணப்படுவதாக நான் கருதுகிறேன். நாட்டின் எதிகால தலைவர்கள் இன்றைய சிறுவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

We care Always எனும் தனது தொனிப்பொருளுக்கமைவாக மொபிடெல் சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறது. அத்துடன் சர்வதேச ரீதியில் புத்தாக்க செயற்பாடுகளுக்கும் முன்னணி தொழில்நுட்ப தீர்வுகளையும் வழங்கி வருகிறது. தனது இணைய மற்றும் புரோட்பாண்ட் சேவைகளை வடக்கு உள்ளடங்கலாக நாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளையும் கம்பனி மேற்கொண்டவண்ணமுள்ளது இதன் மூலம் இலங்கையில் நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

(பா)

# சைவசமய பரீட்சை

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடாத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

தரம் 3 தொடக்கம் தரம் 11 வரை இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் சுட்டிலக்கத்துடன் பரீட்சை நடைபெறும் நிலையம் பற்றிய விபரமும் அனுப்பப்பட்டு வருவதாக பரீட்சைச் செயலாளர் சு.சிறீகாந்தன் தெரிவித்துள்ளார். (10)

## தரம் 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

1 மணி



**01) சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) நீரினால் பரவக்கூடிய ஒரு நோய் எது
   1) கொலரா 2) தடிமன் 3) டெங்கு 4) சின்னமுத்து

2) நீரில் மிதக்கக்கூடிய ஒரு பொருள் எது?
   1) இரும்பு ஆணி 2) காந்தம் 3) பலகை 4) கருங்கல்

3) நீரில் அமிழக்கூடிய ஒரு பொருள் எது?
   1) கண்ணாடிக்குற்றி 2) தக்கை 3) ரெஜிபோம் 4) மரம்

4) நீரில் கரையக்கூடிய ஒரு பொருள் எது?
   1) தேங்காய்எண்ணெய் 2) சீனி 3) ரெஜிபோம் 4) இறப்பர்

5) நீரை உறிஞ்சும் ஒரு பொருள் எது?
   1) பொலித்தீன் 2) ரெஜிபோம் 3) சாக்கு 4) காந்தம்

6) நகர்ப்புற நீர் விநியோகம் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது
   1) கிணறுகள் மூலம் 2) குழாய்க்கிணறுகள் மூலம்
   3) குழாய்நீர் விநியோகம் மூலம் 4) ஆறுகள் மூலம்

7) நீரைச் சுத்தம் செய்ய இடப்படும் இரசாயனப் பொருள் எது?
   1) குளோரின் 2) உப்பு 3) கொண்டிஸ் 4) யூரியா


8) கிணற்றிலிருந்து நீரை வெளியே பெற உதவும் முறை∴ முறைகள் எது? எவை சரியானது?
   1) துலா மூலமத் 2) கப்பி மூலம்
   3) காற்றாலை மூலம் 4) மேற்கூறப்பட்ட மூன்றும்சரி

9) சுத்தமான நீரின் இயல்பு தொடர்பாக சரியானவை?
   1) மணம் இல்லை 2) சுவை இல்லை 3) நிறம் இல்லை 4) மேற்கூறப்பட்ட மூன்றும்சரி

10) நீர் நிலைகளை மாசடையச் செய்வதற்கு காரணமாக இருப்பவை?
   1) மனிதர்கள் 2) மிருகங்கள் 3) பறவைகள் 4) தாவரங்கள்

**02) பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான பெயர்களை எழுதுக**


---------


---------


---------


---------

## 05) Read and match

| | |
|---|---|
| 1) Moter | Soda |
| 2) Drink | Rice and curry |
| 3) Eat | Cycle |
| 4) Three wheeler | Air |
| 5) Aeroplane | Auto |

## 06) Make five words from there letters in family

m r b c f s o e s i r n h u t a e l

1) ......................................................

2) ......................................................


3) ......................................................


4) ......................................................

5) ......................................................

## 07) Fill in the blanks


1) Bala take a ......................................................


2) We play ......................................................


3) ...................................................... is going on the road


4) Kamala is eating ......................................................


5) Malar is drinking ......................................................

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்

3) பொருத்தமான சொற்களை இணைக்குக.

| | |
|---|---|
| பயிர்ச்செய்கைக்கு உகந்த மண் | ஒட்டும் தன்மையை உடையது |
| களிமண் | மண்சரிவை ஏற்படுத்தும் |
| புவி நடுக்கம் | இருவாட்டி மண் |
| செண்பகம் கத்துதல் | நுண்ணங்கி |
| பற்றீரியா | மழைக்கான அறிகுறி |

4). பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1) பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுவோர் யார்?

2) உமது பாடசாலையில் புதிய கட்டடம் அமைப்பதற்குரிய காரணங்கள் 2 தருக.

3) பாடசாலையின் அபிவிருத்திக்கு மாணவர்களாகிய உங்களின் பங்கு என்ன?

4) உமது பாடசாலையிலுள்ள நூலகத்தை அபிவிருத்தி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக

5) உமது பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்தை அபிவிருத்தி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

5) தரப்பட்டுள் கூற்றுக்கள் சரியாயின் ( ) எனவும் பிழையாயின் (X) எனவும் கூட்டினுள் இடுக.

1) பாடசாலையின் அபிவிருத்திக்கு பெற்றோர்கள் உதவுவதில்லை. ( )

2) மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு யுனிசெப் அமைப்பு உதவுகின்றது. ( )


3) பாடசாலை விழாக்களில் மாணவர்கள் உச்சாகத்துடன் பங்குபற்றுவர். ( )

4) பாடசாலையின் அபிவிருத்தியில் மாணவர்களின் பங்களிப்பு அவசியமில்லை. ( )


5) பாடசாலைக் கட்டட அபிவிருத்திக்கு அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவுகின்றன. ( )

6] பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான பெயர்களை எழுதுக



01) Write the name of the picture



1) ..............................

2) ..............................


3) ..............................

4) ..............................

2) ..............................

02) Write in the suitable coloum

| Furniture | Fruit | Vegetable |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |




03) Arrange and write

1) a/ farmer / in / the / field / is ..............................

2) Teacher / water / is / the/ drinking ..............................

3) My / driver / is / a / uncle ..............................

4) Doctor / work / hospital / in / the ..............................

5) God / I / Pray / all / for ..............................

04) Read and Draw

1) Three Birds ..............................

2) Five leaves ..............................

3) Six Chairs ..............................

4) Cup and Saucer ..............................

5) Bucket ..............................

# மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து அரசியல் பிழைப்பு நடாத்தக் கூடாது

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவிப்பு



யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து படிப்படியாக மீண்டு வரும் மக்களது தேவைகளை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்தாது மக்களது இருப்புக்களை உறுதிசெய்யும் வகையில் அவர்கள் வாழும் பகுதிகளை அபிவிருத்தி செய்வதனூடாக வறுமையில் வாடும் குடும்பங்களது வாழ்வியலை மேம்படுத்திக் கொள்ளமுடியும் – என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

மந்துவில் கிழக்கு நவசக்தி சனசமூக நிலைய வாணி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்

எமது மக்கள் இன்னும் ஒரு இயல்பான நிலைக்குள் வரவில்லை என்பது கிராமப்புற பகுதிகளில் வாழும் மக்களது வாழ்வியலிலிருந்து கண்டு கொள்ள முடிகின்றது. இந்த நிலையிலிருந்து மக்களை விடுவிக்கவேண்டும் என்பதற்காகத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசுடன் இணைந்து இணக்க அரசியலூடாக மக்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து வாழ்வாதார உதவிகளையும் பெற்றுத்தந்துகொண்டிருக்கின்றார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாங்கள் மக்களது வாழ்வாதாரம் மற்றும் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொடுத்து தமிழர்களது எதிர்கால சந்ததியினர் வன்முறைகளற்ற சமுதாயமாக பரிணாமமடைய வேண்டும் என்பதற்காகவே எம்மிடமுள்ள அரசியல் பலத்தை வைத்துக் கொண்டு சமுதாய மேம்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மிக வறிய மக்களைக் கொண்டதாக இப்பகுதி மக்கள் இருந்தாலும் தற்கால அரசியல் சுழற்சிக்கேற்ப மக்களுக்காக உழைப்பவர்களை இனங்கண்டு எங்களை நம்பி வந்துள்ளீர்கள். நிச்சயமாக இக்கிராமத்தையும் இங்குள்ள மக்களையும் வெகு விரைவில் மீளெழுச்சியடைய செய்ய அமைச்சரூடாக நடவடிக்கை எடுத்துத்தர முயற்சிக்கின்றேன் என்றார்.

இந்த நிகழ்வில் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ் சமூகப்பெரியவர்கள் ஆகியோருடன் நூற்றுக்கணக்கான அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

# சிறுவர் தின நிகழ்வு



முகமாலை றோ.க.த.க. பாடசாலையின் சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இளந்தென்றல் முன்பள்ளி சிறார்கள் கலந்து கொண்டனர் இதில் ரி.டி.எச். நிறுவன அனுசரணையுடன் கலாசார நிகழ்வும், சுகவாழ்வு யார் கையில் என்னும் குறு நாடகமும் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன.(37)

# கைதடி நீர்வேலி வீதியில் பாலம் அமைக்கக் கோரிக்கை

(நீர்வேலி)

கைதடி நீர்வேலி வீதியில் பாலம் அமைக்கும் கோரிக்கையை கைதடி பிரதேச பொது அமைப்புக்கள் பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத் துள்ளனர்.

கைதடி வடக்கிலிருந்து நீர்வேலி வடக்கு வரை செல்லும் இவ் வீதி 2006 ஆம் ஆண்டில் உலக உணவுத் திட்டத்தின் மூலமும், சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி மூலமும் புதிதாக மண் வீதியாக நிர்மாணிக்கப் பட்டது.

மழை காலத்தில் இவ் வீதியில் நீரோட்டம் அதிகமாக உள்ள பகுதியில் 100 மீற்றர் தூரம் வரையில் வீதி முற்றராக அழிந்தது. அப் பகுதி 2008 ஆம் ஆண்டில் கைதடி மக்களால் புனரமைக்கப்பட்டு நீரோட்ட முள்ள பகுதியில் 3 பாரிய சீமெந்து கட்டுகள் கட்டப்பட்டு பழைய மின்சாரத் தூண்கள் அடுக்கப்பட்டு பாலம் போன்ற அமைப்பு ஏற்படுத்தப் பட்டது.

அந்த பால அமைப் பிலேயே மின்சாரத் தூண்களை எடுத்து விட்டு பாலம் கட்டித் தருமாறு தற்போது அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீர்வேலி பிரதேசத்தில் நீரோட்டமுள்ள இடத்திலும் புதிய பால மொன்றை அமைக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வீதி நன்கு சீரமைக்கப் படுமாயின் வலிகாமம் கிழக்கு தென்மராட்சி பிரதேசத்திற் கிடையில் புதிய மாற்றுப் பாதை ஒன்றும் அமைக்கப்பட்டு விடும். இவ்விரு பிரதேசங்களும் துரித வளர்ச்சி அடைந்து விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (90)

# புதிய நிதி ஆண்டுக்காக 15,123 மில்லியன் நிதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிதி ஆணைக் குழுவினால் 2015 ஆம் நிதியாண்டிற்காக வடமாகாண சபையில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான சம்பளங்கள், படிகளுக்கும் மற்றும் ஏனைய மீண்டும் வரும் செலவீனங்களுக்குமாக ரூபா 15,123 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண சபையினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் மூலதன செலவீனங்களான பிரமாண அடிப்படையிலான கொடைக்கு ரூபா 400 மில்லியனும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடைக்கு ரூபா 1,440மில்லியனும் ஏனைய கருத்திட்ட வேலைகளுக்காக ரூபா 3,447.8 மில்லியனுமாக மொத்த மூலதன செலவீனங்களுக்காக ரூபா 5,257.8 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

# கைதடி வடக்கு மட்டுவில் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்


கைதடி வடக்கு நவபுரத்திலிருந்து மட்டுவில் செல்லும் வீதியினை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபையால் நெல்சிப் திட்டத்தின் கீழ் இந்த வீதியில் ஒன்றரை கிலோ மீற்றர் தூரமான பகுதி சென்ற ஆண்டில் புனரமைக்கப்பட்டிருந்தது.

இந்த வீதியின் எஞ்சிய பகுதியின் பெரும்பகுதி தற்போது புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வீதியில் அழிவடைந்த நிலையிலுள்ள பாலம்தற்போது புனரமைக்கப்படுகிறது. மிகவும் தாழ்வான நிலையிலுள்ள வீதியை புனரமைப்பதற்கான ஏனைய வேலைகளும் மிக விரைவில் முன்னெடுக்கப்பட உள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையால் நெல்சிப் திட்டத்தின் மூலம் இதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ் வீதி முழுமையாக புனரமைக்கப்பட்டு முடியுமாயின் கைதடி மட்டுவில் பிரதேச மக்கள் இலகுவாகவும் விரைவாகவும் பிரயாணம் செய்யும் நிலை உருவாகும் அத்துடன் இப் பிரதேச மக்களின் விவசாய முயற்சிகளும் மேம்பட முடியும். கைதடி மட்டுவில் பிரதேச மக்களின் மிக நீண்ட கால கோரிக்கை இவ் வீதி புனரமைப்பின் மூலம் நிறைவேற வுள்ளது . (90)

# மனிதவள .விருத்தியில் மகிமைபெறும் ஆசிரியர்களின் தினம் இன்று




சமகால மனித வாழ்வின் கல்விப் பல பரிமானங்களில் முதன்மைக் காரணியாகவுள்ளது. தனிமனிதர்களைப் பொறுத்த வரையிலும் அவர்கள் முன்னேற்றத்துக்குரிய நம்பகமான முதலீடாகவும் கல்வி உள்ளது. அந்தவகையில் கல்வியை வழங்கும் ஆசிரியர்களுக்கு உயர்ந்த மதிப்பை இன்றும் உலகளவில் அனைவரும் வழங்கி வருகின்றனர்.

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்பது முதுமொழி தமிழர் தம் பொதுமொழி. எழுத்தறிவித்தல் என்பது கல்விக் கண்களைத் திறத்தல் என்பதாகும்

வாழ்க்கையின் பயனை ஒவ்வொரு மனிதனும் பூரணமாக அடைவதற்கு தான் வாழும சமுதாயத்தினதும் அதனூடாக உலகத்தினதும் செம்மையான வளர்ச்சிக்கு உளப் பூர்வமாகவும் ஒழுங்காகவும் உழைப்பதற்கு கல்வி இன்றியமையாததாகின்றது.

தனி மனிதனின் வளர்ச்சி சமுதாய எழுச்சி, பொருளாதார உயர்ச்சி, ஆன்மீகம் பண்பாட்டு மறுமலர்ச்சி முதலியவை கல்வியின் உயரிய சீரிய இலட்சியங்களாகும்.

கல்வி என்பது மனிதனுள்ளே அரும்பு நிலையிலுள்ள நல்லாற்றலைத் தூண்டி விழிப்படையச் செய்யும் செயற்பாடாகும். இச்செயற்பாட்டின் பிரதான செயலாளன், இயக்குநர் ஆசிரியரே! மனிதனைப் புனிதனாக்கி பூரணமானவனாக ஆக்கும் மகத்தான பணிக்கு தம்மை மெழுகுவர்த்தி போன்று உருக்கி அர்ப்பணிக்கின்றவர்கள் ஆசிரியர்களே!

ஆசிரியத் தொழில் தற்போது உயர்ந்த வாண்மைத் தொழிலாக நோக்கப்படுகின்றது. அதற்கேற்ற வகையில் ஆசிரியர்கள் உலகில் ஏற்படுகின்ற மாற்றங்களை உள்வாங்கி நவீன உலகிற்கு ஏற்றவாறு தம்மை தயார் செய்து கொண்டு சேவையாற்றுவது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

நவீன தொழில் முன்னேற்றம் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களின் அபிவிருத்தி வகுப்பறை கற்றல் கற்பித்தலில் இன்று பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. அம்மாற்றங்களுக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் தம்மை தயார் செய்து ஆசிரியர் வகிபாகத்தை சிறப்பாக மேற்க்கொண்டு அறிவையும் நம்பிக்கையினையும் எதிர்கால சந்ததிக்கு கையளிக்கும் சமூகப் பெறுமதி வாய்ந்த பெரும் பணியை ஆற்றி வருகின்றனர். ஏணிபோல் பலரை வாழ்வில் உயர்த்தி தோணி போல் பலரை வாழ்வில் சிறப்பாக கரைசேர்த்து மாணவர்களின் உன்னத உயர்வுக்காக சேவை புரியும் ஆசிரியர்களை ஆசிரியர் தினமான இன்றைய நாளில் நல்வாழ்வு வாழ வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன.

யோ.கோணேஸ்

# நெல்விதைப்பு ஆரம்பம்

கடந்த சில தினங்கள் பெய்த மழையை அடுத்து யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் நெல் விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நவாலி அராலி, கட்டுடை, வட்டுக்கோட்டை, சங்கரத்தை ஆகிய பிரதேசங்களிலுள்ள வயல்களில் நெல் விதைப்பு மற்றும் நாற்று நடுகைகளிலும் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர். தொடர்ச்சியாக வறட்சி நிலவிய நிலையில் தற்போது பெய்துள்ள மழை விவசாயிகளுக்கு ஒரு ஆறுதலை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை நெல்விளைச்சலுக்காக இனிவரும் நாட்களில் தொடர்ச்சியான மழை வீழ்ச்சி அவசியமானது என விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர். (66)

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் தலிபான்கள்



ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானின் தலிபான் தீவிரவாதிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.


ஐ.எஸ்.ஐ.எஸ் ஆதிக்கத்தை தடுத்து அழிப்பதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் அரபு நாடுகள் கூட்டணியாக ஈடுபட்டுள்ளதால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அதைச் சரி செய்யும் வகையில் அவர்களுக்கு பாகிஸ்தானின் தலிபான் தீவிரவாதிகள் கூட்டணி அமைத்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தலிபான் தீவிரவாதிகளின் செய்தித்தொடர்பாளர ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ளார்.அதில் உங்களது வெற்றியால் நாங்கள் பெருமைப் படுகிறோம், நீங்கள் எங்களது சகோதரர்கள் எப்போதும் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்.

மேலும், உங்களுடைய மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் துணை நிற்போம் என்றும் பிரச்சினைக்குரிய காலங்களில் உங்களுக்கு பக்கபலமாக ஆதரவு தருவோம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நெடுந்தூர ஏவுகணையை பரிசோதித்தது சீனா



(பீஜிங்)

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள நகரங்களை தாக்கி அழிக்கவல்ல, 10 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்கை அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் திறனுடைய ஏவுகணை சோதனையை, சீனா நடத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை சீனாவின் தேசிய தினம் கொண்டாடப்பட்டது. இந்தத் தருணத்தில் தங்களின் அணு ஆயுத திறனை வெளிப்படுத்தும் வகையில், 10 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கவல்ல ஏவுகணை சோதனையை அந்நாட்டு இராணுவம், கடந்த 25ஆம் திகதி நடத்தியுள்ளது. ஷான்ஜி மாகாணத்தில் உள்ள தாயுவான் செயற்கைக்கோள் ஏவு தளத்தில் இருந்து "டாங்பெங் 31பி" என்ற அந்த ஏவுகணை செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டதாக ஹொங்கொங்கில் இருந்து வெளிவரும் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# ஜெயலலிதா மீதான வரி வழக்கு 16ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

ஜெயலலிதா மீதான வருமான வரித்துறையினரின் வழக்கு விசாரணையை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதிபதி தட்சிணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

1993-94ஆம் ஆண்டுக்கான ஜெயலலிதா மற்றும் சசிகலாவின் தனிப்பட்ட வருமான கணக்கையும் தாக்கல் செய்யவில்லை" என்று ஜெயலலிதா, சசிகலா மீது வருமானவரித் துறையினர் 1996ஆம் ஆண்டு எழும்பூர் பொருளாதார குற்றப்பிரிவு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு விசாரணை எழும்பூர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்தது. ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், வருமான வரி கணக்கை தாக்கல் செய்யாததற்கான அபராத தொகையை செலுத்த தயாராக இருப்பதாக வருமான வரித்துறையிடம் ஒரு மனுவை கொடுத்துள்ளோம். இந்த மனு மீது வருமானவரித்துறை இன்னும் முடிவை அறிவிக்கவில்லை.

அதுவரை இந்த வழக்கு விசாரணையை தள்ளி வைக்க வேண்டும் என்று வாதாடினர். இதனை தொடர்ந்து விசாரணையை குறித்த திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி தட்சிணாமூர்த்தி உத்தரவிட்டார்.

உலகச் செய்திகள்

# மகாராஷ்ர்ராவில் தேர்தல் பிரசாரம் காங்கிரஸ் - பா.ஜ.க.நேரடி மோதல்



மகாராஷ்டிரா, அரியானா சட்டப்பேரவை தேர்தல் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளது.' பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் நேற்றுமுன்தினம் நடந்த பிரசார கூட்டங்களில் ஒருவரை ஒருவர் நேரடியாக தாக்கிப் பேசினர்.

நாங்கள் மற்றவர்களுடைய திட்டங்களை திருட மாட்டோம். மக்களின் வளர்ச்சிக்கு உகந்த திட்டங்களையே செயற்படுத்துவோம். காலியாக உள்ள பாத்திரம்தான் அதிக சப்தம் எழுப்பும். அதுபோல உரக்க, உணர்ச்சிபூர்வமாக பேசுவதால், நீங்கள் சொல்வது எல்லாம் உண்மை ஆகிவிடாது என்று அடுக்கடுக்காக குற்றம் சாட்டினார் சோனியா காந்தி.

இதற்கு பிரதமர் மோடி தெரிவிக்கையில்,

கடந்த 60 ஆண்டு காலம் ஆட்சியில் இருந்தவர்கள், 60 நாட்கள் ஆட்சியில் பா.ஜ என்ன செய்தது என்று கேள்வி எழுப்பியுள்ளனர். பெற்ரோல், டீசல் விலை குறைந்துள்ளது.' நாட்டில் தற்போது உள்ள குழப்பங்கள், குளறுபடிகளுக்கு 60 மாதங்களுக்குள் தீர்வு காணப்படும் மகாராஷ்டிரத்தில் காங்கிரஸ் கூட்டணிக்கு வாய்ப்பு அளித்தீர்கள். ஆனால், முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. குஜராத்தைவிட வளர்ச்சியில் மகாராஷ்டிராவை உயர்த்திக் காட்டுவோம் என்று மோடி .வாக்குறுதி அளித்தார்.

# பீகாரில் தசரா கொண்டாட்டம் நெரிசலில் சிக்கி 32பேர் பலி




இந்தியாவின் பீகார் மாநிலத்தில் நடைபெற்ற தசரா கொண்டாட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் உயிரிழந்தனர்.பாட்னா காந்தி மைதானத்தில நேற்றுமுன்தினம் நடைபெற்ற தசரா பண்டிகை கொண்டாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இரவு 7 மணியளவில் இராவண வதம் நிகழ்ச்சி முடிந்ததும், மைதானத்தை விட்டு பொதுமக்கள் கூட்டம்கூட்டமாக வெளியேறினர்.

இதனால் சாலையில் பயங்கர நெரிசல் ஏற்பட்டது. நிலை தடுமாறி ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். அவர்களுக்கு பின்னால் வந்தவர்கள், கீழே விழுந்து கிடந்தவர்களை மிதித்துக் கொண்டு இடறி விழுந்தனர். இப்படி, அடுக்கடுக்காக நூற்றுக் கணக்கானவர்கள் கீழே விழுந்ததில் ஏராளமானோர் காயமடைந்தனர். இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட '32 பேர் மிதிபட்டும், மூச்சுத் திணறியும் இறந்தனர்.

மேலும், காயமடைந்த பலர் பாட்னா அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவ்விபத்தில் பலியானோரின் குடும்பத்துக்கு தலா 2 இலட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரமும் நிவாரணமாக வழங்கும்படி பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.

# தற்கொலைத் தாக்குதல் பாகிஸ்தானில் 10 பேர் பலி

பாகிஸ்தானில் தென் மேற்கு பகுதியில் உள்ள குவாட்டாவில் ஷியா பிரிவினர் பெருமளவில் வாழும் ஹஷாரா நகரம் உள்ளது. இங்குள்ள சந்தைப்பகுதியில் நேற்று முன்தினம் தற்கொலை குண்டுதாரி குண்டை வெடிக்கச் செய்தில் ஒரு பெண் உடபட 5 பேர் உயிரிழந்தனர். 4 குழந்தைகள உப்பட 6 பேர் காயம் அடைந்தனர்.அதே போன்று குவெட்டாவில் சந்தைக்கு அண்மித்த பகுதியில் ரோட்டோரம் குண்டு வெடித்ததில் 5 பேர் காயம் அடைந்தனர். கோஹாட் நகரில் நடந்த குண்டு வெடிப்பில் பஸ் நொருங்கியது. அதில் 5 பேர் உயிரிழந்தனர். 3 பேர் காயம் அடைந்தனர். அதேபோன்று குவெட்டாவில் பஸ் நிலையம் அருகேயுள்ள மற்றொரு சந்தையிலும் தற்கொலை தீவிரவாதி தாக்குதல் நடத்தி னான். அதில் 5 பேர் உயிரிழந் தனர். 10 பேர் காயம் அடைந்தனர். இந்த 2 தற்கொலை தாக்குதல் களிலும் 10 பேர் பலியாகினர்.


# அமெரிக்காவிலும் தூய்மைத் திட்டம் தொடக்கி வைத்தார் நரேந்திரமோடி

இந்தியாவில் காந்தி பிறந்த நாளான ஒக்டோபர் 2ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி தூய்மையான இந்தியா பணியை தொடக்கி வைத்தார்.இது போன்ற தூய்மை திட்டத்தை அமெரிக்காவிலும் தொடக்கி வைத்தார் நரேந்திர மோடி.

அங்குள்ள நியூயோர்க்கில் மேன்ஹாட்டனில் 52ஆவது தெருவில் 2 மற்றும் 3ஆவது அவென்யூவில் இந்த தூய்மைப்பணி நடந்தது.

இந்த திட்டத்தில் பா.ஜனதாவின் வெளிநாட்டு நண்பர்கள் அமைப்பின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் விஜய்ஜோலி தொடங்கி கலந்து கொண்டார். அதில் அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் பலர் கலந்து கொண்டு தூய்மை பணியில் ஈடுபட்டனர்.

# தடுப்பு நடவழிக்கையை மீறி வேகமாக பரவும் எபோலா




எபோலா வைரஸைக் கட்டுப்படுத்த சர்வதேச ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தபோதிலும் அதைவிட வேகமாகப் பரவி வருவதாக ஐ.நா. சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஐ.நா. அமைப்பின் உலக உணவு திட்ட மண்டல இயக்குநர் டெனிஸ் பிரவுன் கூறும்போது,

ஆட்கொல்லி வைரஸான எபோலாவை கட்டுப்படுத்துவதற்கு உலக நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. அப்படி இருந்தபோதிலும் அந்த முயற்சியைவிட வேகமாக எபோலா வைரஸ் பரவி வருகிறது. இதனால் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இக்கட்டான சூழ்நிலை நிலவுகிறது. எனவே, இதைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச சமுதாயம் கூட்டாக இணைந்து அதிவேகமாக செயற்பட வேண்டியது அவசியமாகிறது" என்றார்.

இதேவேளை அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் 50 பேர் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. எனினும், முதலில் 100 பேருக்கு இந்த நோய் பாதிப்பு இருப்பதாகக் கூறப்பட்டது. இது இப்போது குறைந்துள்ளது.இதில் 10 பேருக்கு மட்டும் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது" என்றார்.

- சமரச முயற்சிகள் நடைபெற்றபோதும் -

# துன்னாலையில் நேற்றும் மோதல் ஏழு பேர் பொலிஸாரால் கைது

கரவெட்டி, துன்னாலைப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல் சம்பவங்களை தணிக்கும் வகையில் நேற்று சமரச முயற்சிகள் இடம்பெற்ற போதும் மோதல்களில் ஈடுபட்ட 6 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்று மாலை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்செய்த போது எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவான் குமாரசாமி உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,


நெல்லியடி, கரவெட்டி, துன்னாலை, ஆட்டுப்பட்டி கொலனி இளைஞர்களுக்கும் சக்கு சம்பாதி இளைஞர்களுக்குமிடையே நேற்றுக் காலை மூன்றாவது நாள் சண்டை ஏற்பட்டது.

நேற்று கரவெட்டி பிரதேச செயலகத்தில் இரு பகுதி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் நெல்லியடி பொலிஸாருக்கும் கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீக்கும் இடையில் சமாதான நல்லெண்ண முயற்சி நடந்து கொண்டிருக்கும் பொழுது இரு பகுதி இளைஞர்களுக்குமிடையில் சண்டை மூண்டது.

சண்டை நடந்துகொண்டிருக்கும் இடத்திற்கு இராணுவத்தினரின் உதவியுடன் பொலிஸார் அனுப்பப்பட்டு 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவுவதால் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (18)

## உப அஞ்சல் அலுவலகக் கட்டடம் வவுனிக்குளத்தில் திறப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட வவுனிக்குளத்தில் உப அஞ்சல் அலுவலக புதிய கட்டடம் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக முன்னர் இயங்கி வந்த அஞ்சலகம் அழிவடைந்த நிலையில் அஞ்சல் திணைக்களத்தின் நிதியுதவியின் கீழ் இப்புதிய அஞ்சலக கட்டடம் அமைக்கப்பட்டது.

இதனை அஞ்சல் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரணதுங்கவின் அழைப்பின் பேரில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் இணைப்பாளர் கனகரட்ணம், வடமாகாண ஆளுநரின் இணைப்பாளர் ஐ.எஸ்.எம்.முகைதீன், வடமாகாண சபை உறுப்பினர் ஜனோபர், அஞ்சல் திணைக்கள பணிப்பாளர், அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாங்குளம் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (70)

## மக்கள் நலன்...

நாம் அரசுடனான நல்லுறவு மற்றும் இணக்க அரசியல் ஊடாக பல்வேறுபட்ட அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆனால் ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல் என்பது போலவும், வைக்கோல் பட்டடை நாயாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதவர்களாகவும், விரும்பாதவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில், தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற திராணியில்லாதவர்களாக விளங்கும் கூட்டமைப்பினர் வடமாகாண சபையை கைப்பற்றி ஓராண்டு நிறைவு பெற்ற நிலையில் ஒன்றையேனும் செய்ய முடியாதவர்களாக இருப்பதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

தமது சுயலாபங்களுக்காக முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை கூறிவரும் கூட்டமைப்பினரால் ஒருபோதும் மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் மக்களால் மின்சாரம், வீதிப் புனரமைப்பு, விவசாயத்துக்கான உதவிகள், சமுர்த்தி உதவி, நன்னீரைப் பாதுகாக்கும் திட்டம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கான கட்டடம், அரங்கத்தின் வேலைகளை பூர்த்தி செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவற்றை ஆராய்ந்த அமைச்சர் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி அவற்றுக்கு தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

முன்பதாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரதேசங்களுக்கு இடையிலான கிராமிய சிறுநகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபையால் புனரமைப்பு செய்யப்பட்ட அல்லைப்பிட்டி வெண்புரவி வீதியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்து மக்கள் பாவனைக்காக கையளித்தார்.

இதன்போது வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்), பிரதேச சபை செயலாளர் இராஜகோபால், முன்னாள் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

## அங்கர் முழு...

எனினும் மேலதிக தகவல்கள் எதனையும் என்னால் வழங்க முடியாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் பாலித மகிபால தெரிவிக்கையில்,

கடந்த 30 ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கும் மேற்குறித்த 3 அங்கர் தொகுதிகளின் விற்பனையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி 994076 இலக்கம் கொண்ட தொகுதியின் உற்பத்தி திகதி 21.03.2014 ஆகவும் பொதி செய்த திகதி 6.08.2014 ஆகவும் காலாவதியாகும் திகதி 6.08.2015 ஆகவும்,

1007853 இலக்கம் கொண்ட தொகுதியின் உற்பத்தி திகதி 2.04.2014 ஆகவும் பொதி செய்த திகதி 4.09.2014 ஆகவும் காலாவதியாகும் திகதி 4.09.2015 ஆகவும்,

060510494 இலக்கம் கொண்ட தொகுதியின் உற்பத்தி திகதி 2.04.2014 ஆகவும் பொதி செய்த திகதி 4.09.2014 ஆகவும் காலாவதியாகும் திகதி 4.09.2015 ஆகவும் உள்ள 3 பொதிகள் அடங்கிய அங்கர் முழு ஆடைப் பால்மாவிற்கே தற்காலிக விற்பனை தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை பொன்டேரா நிறுவனத்தின் பரிசோதனைப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சனத் மகவிதானகே இது தொடர்பாக தெரிவிக்கையில்,

மேற்படி 3 தொகுதிகளின் விற்பனை தற்காலிக தடை விதிக்கப்படுவது தொடர்பாக சுகாதார அமைச்சு எமக்கு அறிவித்துள்ளது. இந்தத் தொகுதிகளின் மாதிரிகள் எம்மால் சர்வதேச ஆய்வுகூடங்களுக்கு அனுப்பப்பட்டு அதில் எவ்வித பாதிப்பும் இல்லை என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நாங்கள் சுகாதார அமைச்சின் விசாரணை முடிவுக்காக காத்திருக்கிறோம். அவர்கள் இது ஒரு முன்னெச்சரிக்கை செயற்பாடு என எமக்கு தெரிவித்துள்ளனர் என்றார்.

இதேவேளை கடந்த 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இறக்குமதியான பால்மாவின் அளவு குறைவடைந்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி கடந்த வருடம் 84 ஆயிரம் மெற்றிக்தொன் பால்மா இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் இந்த வருடம் 78 ஆயிரம் மெற்றிக் தொன் பால்மாவே இறக்குமதி செய்யப்பட்டதுடன் 6 ஆயிரம் மெற்றிக்தொன்னாக அது குறைவடைந்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

# மண்டைதீவு வைத்தியசாலை வீதி புனரமைப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வைத்தியசாலை வீதி புனரமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இந்த வீதிப் புனரமைப்பு வேலைகளின் பொருட்டு குறித்த வீதிக்கு சல்லிக் கற்கள் பறிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவு வைத்தியசாலை வீதி புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்தபோதும் குறித்த வைத்தியசாலை வீதியானது திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக கற்கள் வெளிக்கிளம்பிய நிலையில் சேதமடைந்து போயிருப்பதுடன் நோயாளர்கள் அவ்வீதியினூடு பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே பொதுமக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இவ்வீதியைப் புனரமைக்க வேலணை பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மண்டைதீவு கிராமத்தின் பல்வேறு உள்ளக வீதிகளும் இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருவதுடன் மண்டைதீவு பிரதான வீதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. (பா)

# நாகர்கோவில் நாகதம்பிரான் வருடாந்த உற்சவம் ஆரம்பம்



(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் எழுந்தருளி அருள் பாலித்துக்கொண்டிருக்கும் பூர்வீக நாகர்கோவில் நாகதம்பிரானின் இவ்வாண்டுக்கான வருடாந்த உற்சவ நிகழ்வு நேற்றுக் காலை 11.00 மணியளவில் ஆலய குருக்கள் சிவஸ்ரீ சண்முகக்குருக்கள் தலைமையில் அபிஷேகங்களுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங்கள் இடம்பெறும். எதிர்வரும் 8 ஆம் திகதி பாம்பு திருவிழாவும், 9 ஆம் திகதி கப்பல் திருவிழாவும் இடம்பெற்று 12 ஆம் திகதி சமுத்திர தீர்த்த உற்சவமும், மறுநாள் 13 ஆம் திகதியன்று கேணித்தீர்த்த நிகழ்வோடு பெருந்திருவிழாக்கள் நிறைவுறும்.

உற்சவ காலத்தில் அடியவர்கள் பங்குபற்றுவதற்கு வசதியாக அரச, தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதோடு அன்னதான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (40)

# பொதுபலசேனாவின் வேண்டுகோள் கருத்திலெடுக்கும் ஐ.தே.க.

## என்கிறார் அத்தநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக தங்களுடைய கொள்கைத் திட்டங்களைப் பரிசீலிக்குமாறு பொதுபலசேனா விடுத்துள்ள வேண்டுகோளை ஐக்கிய தேசியக் கட்சி கருத்தில்கொள்ளும் என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தமது உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட கொள்கைகளை ஏற்கும் கட்சிக்கு, ஜனாதிபதித் தேர்தலின்போது ஆதரவளிக்கத் தயார் என பொதுபலசேனா தெரிவித்திருந்தது. இது குறித்து பி.பி.சி. சிங்கள சேவைக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து கட்சிகளுடனும் இணைந்து வலுவான கூட்டணியொன்றை அமைப்பதே எமது நோக்கம். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும், பொதுத்தேர்தலாக இருந்தாலும் எதிர்க்கட்சிகளை ஒரே அணியில் திரட்டுவதே எங்களது நோக்கம். இதன் காரணமாக தேர்தல்களில் வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்காக பொதுபலசேனாவின் வேண்டுகோள்களை நிச்சயமாக பரிசீலிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ...

காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ,37)

## நாட்டின்...

ஜனாதிபதி, உலகில் பாரியளவில் மனித உரிமைகள் மீறப்படுகின்ற வேறு நாடுகள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இத்தாலி மற்றும் வத்திகானுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் நாடு திரும்பினார்.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில்; விருப்பம் கொள்ளாத சந்திரிகா

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராக ரணில் விக்ரமசிங்கவைப் போட்டியிட வேண்டாமெனவும் பொது வேட்பாளரை களமிறக்குமாறும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னை சந்தித்த ரணிலுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படும் நிலையில் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்காமல் ஐ.தே.கட்சி தனியாகக் களமிறங்கும் எனவும் அதன் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க லண்டனுக்கு சென்றுள்ளார். அங்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேசினார்.

இதன்போதே அவர் இந்த ஆலோசனையை கூறினார் எனவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான தருணம் வந்துவிட்டது எனவும் இதனால் சகல கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதே புத்திசாலித்தனம் என்றும் சுட்டிக்காட்டினாராம் சந்திரிகா. எனவே ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும், அவர் வென்ற பின்னர் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீக்குமாறும் கூறிய சந்திரிகா, அதுவே ரணில் பிரதமராவதற்கு வழிவகுக்கும் என்றும் அறிவுறுத்தினராம்.

# அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய தேவை இல்லை

## கூறுகிறார் அமைச்சர் டியூ

(கொழும்பு)

அவசரமாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தும் தேவை எழவில்லை என அரசில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் பற்றி தற்போது சகல இடங்களிலும் பேசப்பட்டு வருகிறது. அதற்கு தயாராகும் அடையாளங்கள் தென்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அப்படியான தீர்மானம் எதனையும் இதுவரை எடுக்கவில்லை. அரசாங்கமும் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது பற்றி தீர்மானத்தை எடுக்கவில்லை.

நாங்கள் ஜனாதிபதியை சந்தித்திருந்தோம் அவரும் தேர்தல் நடத்தப்பட உள்ளதாக எம்மிடம் கூறவில்லை. ஆனால், நாடு தயாராகி வருகிறது. இதன் தேவை என்ன என்பது எமக்கு



புரியவில்லை. ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை.

தேசிய தேர்தல் ஒன்று நடத்தப்படுவதற்கு முன்னர், மகிந்த சிந்தனையில் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பது முக்கியமானது.

நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை உள்ளது. ஜனாதிபதிக்கும் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை பதவியில் இருக்க முடியும். அத்துடன் அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது.

இன்னும் இரண்டு வரவு செலவுத் திட்டங்களை தாக்கல் செய்ய முடியும். மகிந்த சிந்தனையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் முழுமை பெறாத வேலைகள் உள்ளன எனவும் டியூ. குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

# சிறுமி மீது துஷ்பிரயோகம்; கைதானார் குடும்பஸ்தர்

சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் குடும்பஸ்தர் ஒருவரை அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

குட்டியப்புலம், செல்வநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் சந்தேகநபரின் வீட்டுக்கு அருகில் வசித்து வரும் 13 வயது சிறுமிக்கு கொப்பி, பென்சில்கள் தருவதாக ஆசை வார்த்தை கூறி அருகில் உள்ள தோட்டத்துக்குள் கூட்டிச் சென்று துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியிருந்தார்.

தனக்கு நடந்தவற்றை சிறுமி பெற்றோருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, அப்பகுதி கிராம சேவையாளர் தெல்லிப்பளை பிரதேச நன்னடத்தை உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியிருந்தார். இதுதொடர்பில் நன்னடத்தை உத்தியோகத்தர் கடந்த 26 ஆம் திகதி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் யாழ்.பெண்கள், சிறுவர் நீதிமன்ற நீதவானின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து, சந்தேகநபரை கைதுசெய்து மன்றில் முற்படுத்துமாறு அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை செல்வநாயகபுரம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டு, நேற்று முன்தினம் சிறுவர் நீதிமன்ற நீதவான் ஜீவராணி கறுப்பையாவின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியவேளை சந்தேகநபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# கைக்குண்டுகள் மீட்பு

வல்வெட்டித்துறைப் பகுதியில் இருந்து இரு கிரனேட்டுக்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை கம்பர் மலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் மதில் கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டும் போது இரு கிரனேட்டுக்கள் காணப்பட்டுள்ளன. இது தொடர்பில் வீட்டின் உரிமையாளர் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, பொலிஸாருடன் வந்த இராணுவத்தினர் வெடிக்கக் கூடிய நிலையில் இருந்த இரு கிரனேட்டுக்களையும் மீட்டுச் சென்றுள்ளனர்.

## நடுத்தர மக்களின் பிரச்சினைகள்

# அரசிடம் யோசனைகளை முன்வைக்கவுள்ள சம்பிக்க

(கொழும்பு)

நடுத்தர வருமான பொது மக்களின் பிரச்சினையை தீர்க்கும் வகையில் அரசாங்கத்திற்கு புதிய யோசனைகளை முன்வைக்க உள்ளதாக தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சித் துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை திறந்த பொருளாதார முறைக்குள் வந்து 40 வருடங்கள் கடந்து விட்டது.

திறந்த பொருளாதார முறையை அறிமுகப்படுத்திய நாடுகளுடன் ஒப்பிடும் போது தனிநபர் வருமானத்தை 12 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என்ற வரையறையை இலங்கையால் கடந்து செல்ல முடியாது போயுள்ளது.

களியாட்டுக்களை அடிப்படையாக கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குவதனால், நாட்டில் நடுத்தர வருமானம் பெறும் மக்களின் பிரச்சினையை தீர்க்க முடியாது.

இந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டுமாயின் அறிவை அடிப்படையாக கொண்ட பொருளாதாரம் நாட்டுக்கு தேவை.

இதனடிப்படையில் புத்திஜீவிகளின் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் மூலம் புதிய முதலீட்டு யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த யோசனைகள் நாளைய தினம் வெளியிடப்பட உள்ளது எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

# பிரதமர் வேட்பாளராக சஜித் கோரிக்கை விடுக்கும் ஹரின்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், பிரதமர் வேட்பாளராக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பெயரை, ஐ.தே.க தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க அறிவிக்க வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊவா மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான ஹரின் பெர்ணான்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொலன்னாவை பிரதேசத்தில் இடம்பெற்ற ஐ.தே.கவின் கூட்டமொன்றில் உரையாற்றிய போது, அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ரணில் விக்ரமசிங்க, பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவித்தால் கட்சிக்காக எம்மை அர்ப்பணிக்க நாம் தயாராகவுள்ளோம்.

ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதித் தேர்தல் பொறுப்புக்களை சஜித் பிரேமதாச மற்றும் கட்சியினரிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க.வுக்கு வெற்றி கிடைப்பது உறுதி என்றார்.

# பொலிஸாரின் சோதனைச் சாவடி தூக்கிச் சென்ற திருடர்கள்

கொழும்பை அண்மித்த இங்கிரிய பொலிஸ் நிலையத்தின் முன்பாக அமைந்திருந்த சோதனைச் சாவடியை திருடர்கள் தூக்கிச்சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்கு வருகின்றவர்களை சோதனைக்குட்படுத்துவது, பாதையைக் கண்காணிப்பது போன்ற நடவடிக்கைகளை முன்னிட்டு இரும்புக் கம்பிகளைக் கொண்டு இந்த சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை இந்த சோதனைச் சாவடியை திருடர்கள் அங்கிருந்து தூக்கிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையம் முன்பாக இருந்த சோதனைச் சாவடி திருடிச் செல்லப்பட்ட சம்பவம் பிரதேச. மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வருமர்ன வரியை செலுத்தினால் வரிச்சலுகையுடன் வாகன இறக்குமதி

வருமானவரியை ஒழுங்காக செலுத்தும் இலங்கையர்களுக்கு, வரிச்சலுகையுடன் வாகனங்களை இறக்குமதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்க தேசிய இறைவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, வருடாந்தம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான வருமான வரியை செலுத்துபவர்களுக்கு இந்த சலுகைகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் வருடாந்தம் பத்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமான வரியை செலுத்துகின்றவர்களுக்கு, தங்க சலுகை அட்டை ஒன்று வழங்கப்படவுள்ளதுடன், 5 இலட்சத்துக்கும் அதிகமான வரியை செலுத்துகின்றவர்களுக்கு வெள்ளி சலுகை அட்டையும் வழங்கப்படவுள்ளது.

இந்த அட்டைகளைக் கொண்டு அரச வங்கிகள் மற்றும் நிறுவனங்களுடன், விமான நிலையங்கள், துறைமுகங்கள் போ்ன்றவற்றில் பல சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர்கள் மத்தியில் அதிகரிக்கும் எச்.ஐ.வி.

(கொழும்பு)

இளைஞர்கள் மத்தியில் எச்.ஐ.வி. தொற்று அதிகரித்து வருவதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பில் இளைஞர்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, எயிட்ஸ் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

அதேநேரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற தலைமைத்துவ பயிற்சியின் போது, இது குறித்த தெளிவுபடுத்தலையும் வழங்குமாறு, உயர்கல்வி அமைச்சு கோரி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.